பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 19 | ஞாயிற்றுக்கிழமை | 03.03.2024 | அதிர்வு 215

## ஆசிரியர் கருத்து

நேற்று காலையிலும் மாலையிலும் வெளியான முரசு இதழ்களின் தலைப் புச் செய்திகளில் மரணமடைந்த சாந்தன் குறித்து 'இந்திய நயவஞ்சகத்தால் உயி ரிழந்த' அல்லது 'இந்திய நயவஞ்சகத்தால் சாகடிக்கப்பட்ட' என்று குறிப்பிடப்பட்டிருந் தமை சில தரப்புக்களினால் 06

# சாந்தனின் பூதவுடல் உறவுகளிடம் கையளிப்பு

மீள் மரண விசாரணை மற்றும் மீள் உடற்கூற்றுப் பரிசோதனை நிறைவு பெற்ற பின்னர் சாந்தனின் பூதவுடல் நேற்று மாலை உறவினர்களிடம் கைய ளிக்கப்பட்டது.

இந்தியாவில் 33 வருட சிறை வாசத் தின் பின்னர் தாயகம் திரும்பக் காத்தி ருந்த ஈழத்தமிழன் "சாந்தன்" என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந் திரராஜா கடந்த புதன்கிழமை சென்னை யில் உள்ள ராஜீவ் காந்தி அரச வைத்திய சாலையில் மாரடைப்பால் காலமானார்.

அவரின் பூதவுடல் சென்னையில் இருந்து விமானம் மூலம் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை பகல் இலங் கைக்குக் கொண்டுவரப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலையத் தில் அவரின் பூதவுடலைப் பெறுவதில் தாமதம் நிலவியது. நீண்ட இழுபறியின் பின்னர் சாந்தனின் பூதவுடலை விமான நிலைய அதிகாரிகள் 06

### நாளை எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம்

# சாந்தனின் புகழுடல் இன்று தமிழ் மக்களின் அஞ்சலிக்கு

## தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்க பொது அமைப்புக்கள் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லை யம்பலம் சுதேந்திரராஜாவின் புகழுடல் வடக்கில் இன்று மக்கள் அஞ்சலிக்கு வைக்கப் படவுள்ள நிலையில் இன்றைய தினத்தை தமிழ்த் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கு மாறு பொது அமைப்புக்கள் பகிரங்க வேண்டு கோள் விடுத்துள்ளன.

இன்றைய தினத்தைத் தமிழ்த் தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்கப் பொது அமைப்புக் கள் நேற்று ஒன்று கூடி தீர்மானித்துள்ளன என்று அறிவித்துள்ள குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் முருகையா கோமகன்,இன்றுதேவையற்றகளியாட்டநிகழ் வுக்களைத் தவிர்த்து அமரர் சாந்தனுக்கு அனைவரும் திரண்டு வந்து அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ளார். 06

## ஜனாதிபதித் தேர்தலே முதலில்! ரணில் களமிறங்குவது உறுதி!!



**ஐ.தே.க. திட்டவட்டம்**

"நாட்டில் முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும். இது நூறு வீதம் உறுதி."

– இவ்வாறு அடித்துக் கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஆசு மாரசிங்க.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 06




வெளிநாட்டிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புலம்பெயர் ஆதரவாளரான இளை ஞர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

தமிழரசுக் கட்சியில் தமிழ்த் தேசியம் வென் றதாக ஆர்ப்பரிப்பவர்க ளில் அவரும் ஒருவர்.


இப்போது நீதிமன்ற நடவடிக்கையின் அனுகுமுறையால் வீட்டு சின்னம் முடக்கப் படலாம் என்று என் பத்தி எழுத்துக்களில் எச்சரிக்கப்பட்டிருப்பது 06

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# இலங்கையில் யுத்தம் முடிந்து 15 வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேயில்லை

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு



இலங்கையின் அண்மைய பொருளாதார முன்னேற்றம், புதிய சட்டங்களால் இருட்டடிப்பு செய்யப்படுவதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கெர் டேர்க் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தமது வாய்மூல அவதானிப்பு அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவரின் அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

படுமோசமான சமூக, பொருளாதார நெருக்கடிக்கு காரணமான - தவறான - பொருளாதார முகாமைத்துவத்துக்கும் ஊழலுக்கும் பொறுப்புக்கூறக் கோரியும் ஆழமான ஜனநாயகச் சீர்திருத்தங்களை வேண்டியும் இரு வருடங்களுக்கு முன்னர் ஆயிரக்கணக்கில் இலங்கையர்கள் வீதிகளில் இறங்கி கிளர்ச்சி செய்தார்கள். நாட்டின் சகல சமூகங்களுக்கும் பயன்தரக்கூடியதாக நீண்டகாலத்துக்கு முன்னரே இடம்பெற்றிருக்கவேண்டிய மாற்றத்தை முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்ற பெரிய நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் அப்போது இருந்தது.

பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதற்கு முக்கியமான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்ட அதேவேளை, அடிப்படை உரிமைகள், சுதந்திரங்கள், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஜனநாயக ஆட்சிமுறை மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய அல்லது உத்தேச சட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவது குறித்து நான் கவலை கொண்டிருக்கிறேன்.

இணைய வழி பாதுகாப்பு சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், இலத்திரனியல் ஊடக ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம், அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவன மேற்பார்வை மற்றும் பதிவு சட்டமூலம் ஆகியவை அவற்றில் அடங்கும். இவை நிறைவேற்று அதிகாரபீடத்தின் அதிகாரங்களை மேலும் வலுப்படுத்தி, பாதுகாப்பு படைகளுக்குப் பரந்தளவு அதிகாரங்களை வழங்குவதுடன், ஒன்று கூடுவதற்கும் கூட்டு அமைப்பதற்கும் கருத்து வெளிப்பாட்டுக்கும் இருக்கும் சுதந்திரங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் சிவில் சமூகப் பரப்பை மாத்திரமல்ல வர்த்தகத்துக்கான சூழ்நிலை மீதும் தாக்கத்தைச் செலுத்தும்.

அதேவேளை, இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் அனர்த்த விளைவுகள் மிகவும் வசதிகுறைந்த பின தங்கிய மக்கள் பிரிவினரை தொடர்ந்தும் படுமோசமாக வதைக்கிறது. கடந்த வருடம் வறுமை 27.9 சதவீதத்துக்கு உயர்ந்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. 2022 மார்ச்சில் இருந்து சுமார் மூன்றில் இரண்டு பங்கு குடும்பங்களின் மாதாந்த வருமானம் குறைவடைந்திருக்கின்ற அதேவேளை, உணவு, போக்குவரத்து,கல்வி செலவினங்கள் தொடர்ந்தும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.சமூகப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்ற போதிலும், அதை வேண்டிநிற்கும் மக்கள் தொகை அதிகரித்த வண்ணமே இருக்கிறது. இவ்வருடம் அரசாங்கத்தின் மிகவும் பெரியளவு பட்ஜெட் செலவினம் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கே செல்லும். பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்கு வசதியாக சர்வதேச நிதி நிறுவனங்களும் கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு நிதி வசதியையும் ஆதரவையும் வழங்கவேண்டும் என்று நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

நீண்டகால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து இவ்வருடம் 15 வருடங்கள் நிறைவடைகிறது. இருந்தாலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. காணாமல்போனவர்களின் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் உறவினர்களை இன்னமும் தேடிக்கொண்டிருக்கின்றன. அந்த முயற்சிகளின் போது அவர்கள் அச்சுறுத்தலையும் கைதுசெய்யப்படும் ஆபத்தையும் வன்குறையையும் எதிர்நோக்குகிறார்கள். வடக்கிலும் கிழக்கிலும் தொடரும் நிலத் தகராறுகள் மக்களின் வாழ்வாதாரத்தைக் கடுமையாகப் பாதிக்கின்றன. ஓரளவு அதிகாரப்பரவலாக்கத்தை உறுதிசெய்யும் மாகாணசபைகளும் உள்ளூராட்சி சபைகளும் தற்போது இயங்கவில்லை.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுக்குப் பிறகு சுமார் ஐந்து வருடங்கள் கடந்துவிட்டன. உயர்நீதிமன்றம் உத்தரவுகளைப் பிறப்பித்த, போதிலும் மக்கள் உண்மையையும் நிதியையும் இன்னமும் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மை,ஐக்கியம் மற்றும்

03

# சட்டவிரோதமாக மரக்குற்றிகளை கடத்தியவர் பொலிஸாரால் கைது



(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுணாவில் வைரவர் கோவில் பகுதியில் சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது மூன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான 6 இலுப்பை மரக்குற்றிகள் மற்றும் 3 வேப்ப மரக் குற்றிகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அத்துடன் உழவு இயந்திரத்துடன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கையில் யுத்தம் முடிந்து 15 வருடங்களாகியும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேயில்லை

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிப்பு

(2ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு ஒன்றுக்கான சட்டவரைவை அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருக்கின்றபோதிலும், உண்மையை நாடும் நம்பகத்தன்மையான செயன்முறை ஒன்றுக்கானஉகந்தசூழல்இன்னமும்தோன்றவில்லை. சிவில் சமூகப் பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் போரில் இறந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பு படைகளினால் கண்காணிப்புக்கு உள்ளாகுவதாகவும் துன்புறுத்தப்படுவதாகவும் கைது செய்யப்படுவதாகவும் முறைப்பாடுகள் எனது அலுவலகத்துக்கு தொடர்ந்து கிடைத்த வண்ணமே இருக்கிறது.

இலங்கைப் பாதுகாப்பு படைகளும் பொலிஸரும் பாலியல் வன்முறைகள் மற்றும் ஆள்கடத்தல்கள், சட்டவிரோத தடுப்புக்காவல் மற்றும் சித்திரவதைகளில் ஈடுபடுவதாக நம்பகமான விவரங்கள் எனது அலுவலகத்துக்குக் கிடைத்து வருவது குறித்து நான் ஆழ்ந்த கவலையடைகிறேன். இந்தச் சம்பவங்கள் பிரதானமாக நாட்டின் வடக்கு, கிழக்கு பகுதிகளிலேயே இடம்பெறுகின்றன.

கடந்த வாரம் புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது. 2010 ஆண்டில் நபர் ஒருவர் சித்திரவதை செயயப்பட்ட சம்பவத்துக்கு அவர் பொறுப்பாக இருந்தார் என உயர்நீதிமன்றம் திர்ப்பளித்தபோதிலும் இந்த நியமனம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவங்கள் விரிவான பாதுகாப்புத்துறைச் சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.

பிற்போக்கான சட்டங்களையும் எதேச்சாதிகார அணுகுமுறைகள் மூலமாக இலங்கையில் நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் சாதிக்கமுடியாது. அவை கடந்த காலத்து மனித உரிமைமீறல்கள் பற்றிய கவலைகளை நீடிக்கவே செய்யும்.

இந்தப் போக்கை உடனடியாக்கி மறுதலையாக்கி கடந்தகால மற்றும் நிகழ்கால மனித உரிமை மீறல்களையும் பொருளாதாரக் குற்றங்களையும் விசாரணை செய்து அவற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தொடருவதற்கு நம்பகமான பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நான் வலியுறுத்திக்கேட்டுக்கொள்கிறேன். சர்வதேச மற்றும் எல்லை கடந்த நியாயாதிக்கத்தை உகந்த முறையில் பயன்படுத்தவது உட்பட இந்த முயற்சிகளை தொடர்ந்து உறுதியாக முன்னெடுக்குமாறும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களைச் செய்ததாக நம்பகமான முறையில் குற்றச்சாட்டப்படுபவர்களை இலக்குவைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்புநாடுகளைக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் முரண்பாட்டினதும் பொருளாதார நெருக்கடியினதும் மூலவேர்க்காரணிகளை கையாளுவதன் மூலமாகவும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதன் மூலமாகவும் மாத்திரமே மெய்யான நல்லிணக்கத்தையும் நிலைபேறான சமாதானம் மற்றும் அபிவிருத்தியையும் அடைவதற்கான வாய்ப்புக்களை இலங்கையினால் மேம்படுத்தக்கூடியதாக இருக்கும். – என்று உள்ளது.

# அரசாங்கத்தினர் ஜனாதிபதியுடன் இணைந்து ஊழல்வாதிகளை பாதுகாத்து வருகின்றனர்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



"தற்போதைய அரசாங்கத்தில் உள்ள பெரும்பாலானவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து ஊழல்வாதிகளையே பாதுகாத்து வருகின்றனர்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் 113 ஆவது கட்டமாக 10 லட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், அம்பாந்தோட்டை, திஸ்ஸமஹாராம, பகுதியில் உள்ள பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் ஜனநாயகத்தின் 3 முக்கிய தூண்களாக நிறைவேற்றுதுறை, சட்டத்துறை மற்றும் நீதித்துறை என்பன இருந்தாலும், ஜனநாயகம் பெயரளவில் மட்டுமே செயல்படுகின்றது.

நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகளை பாதுகாப்பதாகவும் திருட்டு, லஞ்சம் மற்றும் மோசடிகளை பாதுகாத்து வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர், மருந்துப்பொருள் கொள்வனவு செயன்முறையில் நடந்த மோசடி உண்மை வெளிவந்ததையடுத்து, முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுவந்தது. இதன்போது சுகாதார அமைச்சரைப் பாதுகாப்பதில் அரசாங்கத்தின் 113 உறுப்பினர்கள் ஈடுபட்டனர், நாட்டை ஆளும் ஜனாதிபதி அவரைப் பாதுகாக்கச் செயற்பட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முக்கியத்துவம் தற்போது வெளிப்பட்டுள்ளது.

நாட்டிற்கு பயன் தராத திட்டங்களுக்கு பெரும் கடன் வாங்கி ஊழல், மோசடி, திருட்டு என பெரிய அளவில் இயங்கி வருவதால் நமது நாடு 90 பில்லியன் டொலர் கடனாளியாக மாறியுள்ளது.

நாட்டை அழித்தவர்களை ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் வெளிப்படைத்தன்மையுடன் நீதிமன்றில் முன்னிறுத்தி தண்டித்து, நாட்டின் வளங்கள் நாட்டுக்கு மீண்டும் கொண்டு வரப்படும்." – என்றார்.



# சுற்றுலாப் பயணிகள் வருகை 2 லட்சத்தைக் கடந்துள்ளது

தொடர்ந்தும் மூன்றாவது மாதமாக இலங்கையின் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சத்தைக் கடந்துள்ளது.

அதன்படி, கடந்த பெப்ரவரி மாதம் மாத்திரம் 2 லட்சத்து 18 ஆயிரத்து 350 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் ஹறின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தமது எக்ஸ் பக்கத்தில் பதிவிவொன்றின் ஊடாக அவர் இந்த விடயத்தைக்கு றிப்பிட்டுள்ளார்.

2023 இல், ஒரு லட்சத்து 639 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் சுற்றுலாப் பயணிகளின் வருகை சுமார் 100 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில், கடந்த டிசம்பர் மாதம் 2 லட்சத்து 10 ஆயிரத்து 352 சுற்றுலாப் பயணிகளும், ஜனவரி மாதத்தில் 2 லட்சத்து 8 ஆயிரத்து 253 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பலவீனமான வேட்பாளரைக் களமிறக்கினால் பொதுஜன பெரமுனவில் இருந்து விலகுவேன்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஜனாதிபதி தேர்தலுக்குப் பலவீனமான வேட்பாளரை களமிறக்கினால் கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவேன். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகைமை உள்ளவர் பொதுஜன பெரமுனவில் தற்போது இல்லை."

– இவ்வாறு வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் அரசியல் கொள்கை ரீதியில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தபோது எதிர்கால அரசியல் பற்றி ஆராய்ந்துகொண்டு சோதிடம் பார்த்துக்கொண்டிருக்காமல் தனி மனிதனாக ரணில் விக்கிரமசிங்க பாரிய சவால்களை ஏற்றுக் கொண்டார்.

2022 ஆம் ஆண்டைக் காட்டிலும் சமூக கட்டமைப்பு தற்போது மாற்றமடைந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வாழ்க்கை செலவுகள் அதிகரிப்பு என்ற குற்றச்சாட்டு மாத்திரம் முன்வைக்கப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளது. புத்தாண்டுக்கு முன்னர் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடையும். நாட்டையும், நாட்டு மக்களையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டு மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

பொருளாதார நெருக்கடியின் போது அரசாங்கத்தை பொறுப்பேற்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் முன்வரவில்லை.

நெருக்கடியான சூழ்நிலையில் சவால்களை ஏற்பதுதான் சிறந்த தலைமைத்துவம். மாற்றம் வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு மக்கள் சஜித் பிரேமதாஸ அல்லது அனுரகுமார திஸாநாயக்கவை ஜனாதிபதியாக தெரிவு செய்ததன் பின்னர் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியை போன்று பொருளாதார நெருக்கடியான சூழல் ஒன்று ஏற்பட்டால் அவர்கள் எவ்வாறு அதனை சமாளிப்பார்கள்? ஆகவே மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

அரசமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும். பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராகவோ அல்லது பொதுவேட்பாளராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்பட வேண்டும் என்பதை பொதுஜன பெரமுனவிடம் வலியுறுத்தியுள்ளேன்.

பலவீனமான வேட்பாளரை ஜனாதிபதி வேட்பாளராக பொதுஜன பெரமுன களமிறக்கினால் கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவேன்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தகைமை உள்ளவர் ஒருவர் பொதுஜன பெரமுனவில் தற்போது இல்லை. கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு தகைமையற்றவர். இதனை நான் அவரிடமே குறிப்பிட்டுள்ளேன்."– என்றார்.

# உடப்பில் வீட்டின் சுவர் வீழ்ந்து இளைஞன் பரிதாப உயிரிழப்பு





(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆண்டிமுனைக் கிராமத்தில் வீட்டின் சுவர் வீழ்ந்து இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடப்பு, 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 18 வயதுடைய முத்துச்செல்வம் தனுஜன் எனும் இளைஞனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

ஆண்டிமுனைக் கிராமத்தில் உடைக்கப்பட்ட வீடொன்றின் பகுதியளவில் காணப்பட்ட சுவற்றின் அருகில் நின்று கொண்டிருந்த இளைஞன் மீது சுவரின் ஒரு பகுதி திடீரென வீழ்ந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட குறித்த இளைஞனை அங்கிருந்தவர்கள் உடனடியாக உடப்பு பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்த்தனர்.

எனினும், மேற்படி இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போதிலும் அந்த இளைஞன் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவருக்குப் பிடிக்கவில்லை. எரிச்சலைத் தந்திருக்கும் போல.

“உதயசூரியனை சங்கரி முடக்கிய போது நம் கைவசம் வீட்டுச் சின்னம் இருந்தது. இப்போது வீட்டுச் சின்னம் முடக்கப்பட்டாலும் நாங்கள் குத்துவிளக்கிடம் போகத் தேவையில்லை. அவசரத்துக்கு எங்களிடம் இரண்டு சின்னங்கள் உண்டு.” – என்று அவர் திமிர்த்தனமாக – துடுக்குத்தனமாக – பேசினார். நான் அவர் பாணியிலேயே பதில் கொடுத்தேன்.

“தம்பி... நீங்கள் சொல்லுவது நல்லது. நமது புலம்பெயர் மகா வர்த்தகப் பிரமுகர் இலங்கை அரசியலிலும் மூக்கை நுழைத்துள்ளார் என்பதை நானும் அறிவேன். அவர் இரண்டு அரசியல் கட்சிகளை விலைக்கு வாங்கியுள்ளார் என்றெல்லாம் பேச்சடிபடுவதும் எனக்குத் தெரியும். அதைத்தான் நீங்களும் குறிப்பிடுகின்றீர்கள் என்று நினைக்கிறேன். விட்டுச் சின்னம் முடக்கப்பட்டால் அந்தரம் ஆபத்திற்கு அவரின் கட்சியையும் சின்னத்தையும் பயன்படுத்தும் திட்டமோ அல்லது அவரது கட்சியிலும் சின்னத்திலும் தமிழரசைக் கொண்டு போய் மாட்டுவதற்காக இப்படி எகத்தாளமாக நீதிமன்றத்தில் விடயத்தை அணுகுகிறார்களோ யானறியேன். ஆனால் நீங்கள் கூறும் வர்த்தகப் புள்ளி இரண்டு கட்சிகளை வாங்கிய விடயத்தில் தேர்தல் ஆணையம் உஷாராகி, மூக்கை நுழைத்துக் குழப்பம் பண்ணுவதாக ஒரு பேச்சுடிபடுகின்றது. அந்தச் சின்னத்துக்கு அங்கீகாரம் பெறுவதற்காக வீட்டை முடக்குவதற்கு இணங்கிக் காய் நகர்த்தினால் வீடுமில்லாமல், வாசலும் இல்லாமல், நடுவீதியில் குந்த வேண்டி நேர்ந்தாலும் நேரலாம்.” – என்றேன் நான்.

அவர் விளங்கியும் விளங்காதவர் போல “அப்படியா...? ” என்று இழுத்தடித்துப் பதில் தந்தார்.

சம்பந்தப்பட்ட தரப்புகள் முன்கூட்டியே எச்சரிக்கையாக இருப்பதற்காக இந்த உரையாடல் சமர்ப்பணம்.

# இந்த வருடம் ஜனவரியில் இறக்குமதி செலவு அதிகம்




கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஜனவரியில் பொருள்களின் ஏற்றுமதி வருமானம் குறைந்துள்ளதாகவும், இறக்குமதி செலவு அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டு ஜனவரியுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு 0.8 வீத சரிவை பதிவுசெய்துள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரியில், ஏற்றுமதி வருவாய் 978 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும், இந்த ஆண்டு ஜனவரியில், 971 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவும் பதிவாகியுள்ளது.

விவசாய மற்றும் ஆடை ஏற்றுமதி வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே இதற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## சாந்தனின் புகழுடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழகத்தில் உயிர் துறந்த தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் (சாந்தன்) புகழுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை மக்கள் அஞ்சலி செலுத்த ஏதுவாக அவரது தாய் மண்ணுக்கு எடுத்துவரப்படவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு வவுனியாவில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும் சாந்தனின் புகழுடல் தொடர்ந்து மாங்குளம் பகுதிக்கு 9 மணிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

தொடர்ந்து காலை 10.30 மணிக்குக் கிளிநொச்சியில் மக்கள் அஞ்சலியின் பின்னராக யாழ்ப்பாணத்துக்குப் புகழுடல் எடுத்துவரப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கொடிகாமம், நெல்லியடி ஊடாக அவரது பிறந்த மண்ணான உடுப்பிட்டிக்குப் புகழுடல் எடுத்துவரப்பட்டு வல்வெட்டித்துறை – தீருவிலில் பிற்பகல் 2 மணி முதல் 3 மணிவரை மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

மாலை அவரது வீட்டுக்கு எடுத்துச் செல்லப்படும் புகழுடல் நாளை திங்கட்கிழமை அவரது குடும்ப மயானமான எள்ளங்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

வவுனியா, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அஞ்சலிநிகழ்வுகளில் வேறுபாடுகளைக் களைந்து அனைவரையும் அணிதிரண்டு அஞ்சலி செலுத்த அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள், அனைத்து இடங்களிலும் நீதி கோரியும் துக்க தினத்தை நினைவுகூரும் வகையிலும் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிடவும் கோரிக்கை விடுத்துள்ளன.

இன்று இறுதி நினைவஞ்சலி நடத்தப்படவுள்ள வல்வெட்டித்துறை – தீருவிலில் அனைவரையும் திரண்டு வர அழைப்பு விடுத்துள்ள பொது அமைப்புக்கள், இறுதிக்கிரியைகள் நடைபெறும் நாளை திங்கட்கிழமை குடும்பத்தவர்கள் மற்றும் ஊர் மக்கள் அஞ்சலி செலுத்தவும் ஒத்துழைக்கக் கோரிக்கை விடுத்துள்ளன.

## ஜனாதிபதித் தேர்தலே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னதாக நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என எதிரணிகள் அறிவித்து வரும் நிலையிலேயே அவர் ஊடகங்களிடம் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவித்ததாவது:–

“எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும். நாடாளுமன்றத் தேர்தலுக்குக் காலம் உள்ளது. எனவே, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்பது நூறு வீதம் உறுதி.

தேர்தலில் தேசிய வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்குவார். பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படும். நெருக்கடி நிலையில் இருந்து ஜனாதிபதியும், அமைச்சர்களுமே அர்ப்பணிப்புடன் நாட்டை மீட்டனர்.

அதேவேளை, சம்பள உயர்வு தொடர்பில் மத்திய வங்கி எடுத்துள்ள முடிவு தவறு. அது மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.” – என்றார்.

## ஆசிரியர் கருத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருத்தத்துடன் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

நீண்ட சட்டப் போராட்டத்துக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட சாந்தனை இந்த ஒன்றரை வருட காலத்துக்குள் இந்திய மத்திய அரசும், மாநில அரசும் மற்றும் இலங்கை அரசும் இணைந்து தாமதிக்காமல் விரைந்து அவரின் அபலைத் தாயாருடன் ஒன்றுசேர அனுமதித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்பதே ‘முரசு’வின் நிலைப்பாடு. சாந்தன் இந்திய நயவஞ்சகத்தால் சாகடிக்கப்பட்டார் என்பதல்ல.

இரண்டு தலைப்புச் செய்திகளிலும் அத்தகைய வாசகம் இடம்பெற்றமைக்காகவும், அதனால்தரப்புக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காகவும் வருந்துகின்றோம். (ஆ–ர்)

## சாந்தனின் பூதவுடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒப்படைத்தனர்.

அதன்பின்னர் மாலை வேளையிலேயே மீள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்குப் பூதவுடல் கொண்டு செல்லப்பட்டது.

பூதவுடலை நேற்றுமுன்தினம் இரவு பார்வையிட்ட நீர்கொழும்பு நீதிவான், சாந்தனின் இரத்த உறவுகள் இருவர் முன்னிலையில் மீள் மரண விசாரணைகளை முன்னெடுத்த பின்னரே மீள் உடற்கூற்றுப் பரிசோதனையை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதற்கமைய நேற்றுப் பகலே மீள் மரண விசாரணை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மீள் உடற்கூற்றுப் பரிசோதனையை நடத்துவதில் நீர்கொழும்பு வைத்தியசாலை நிர்வாகம் தாமதம் காட்டியது.

எனினும், சகல பரிசோதனைகளும் நிறைவு பெற்று பூதவுடல் நேற்று மாலை தம்மிடம் கையளிக்கப்பட்டது என்று சாந்தனின் சகோதரன் மதிசுதா தெரிவித்தார்.

# தேயிலைத் தொழில்துறையினருக்கு குறைந்த விலையில் உரம் தரப்படும்



## விவசாய அமைச்சர் தெரிவிப்பு

“அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உர தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர் தரத்திலான தேயிலை உரம் சந்தை விலையை விட குறைவாக தேயிலைத்தொழில்துறையினருக்குவழங்கப்படும். குறைந்தபட்சம் 2000 ரூபா என்ற குறைந்த விலையில் இந்த உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.”

– இவ்வாறு விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இந்த நாள்களில் நாடு முழுவதும் வெப்பமான காலநிலை நிலவுகிறது. இதனால் நீர் ஊற்றுகள் இல்லாமல் போகின்றன. இந்த நிலைமையை கருத்தில் கொண்டு ஒரே நாளில் முழு வயலிலும் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுமாறு விவசாய சமூகத்திடம் கேட்டுகொள்கிறோம்.

மேலும், விவசாயத்துறையில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். நாற்று நடுதலுக்காக “பரசூட்” முறைமையை பயன்படுத்த வேண்டும். அது குறித்த பொறுப்பு விவசாய துறையினரை சார்ந்துள்ளது. வயல் உழுவதற்காக, ‘வட்டு கலப்பை’ மற்றும் ‘மில் போட் கலப்பை’ ஆகிவற்றை பயன்படுத்துமாறு கோருகிறோம். தற்போது வெற்றிகரமாக விவசாயம் செய்து வரும் விவசாயிகள் தங்கள் அறுவடை இலக்குகளை அடைந்துகொள்ள மேற்படி முறைமைகளை பயன்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், கிடைக்கும் நீரின் அளவு குறைந்துள்ளதால், மேலதிக பயிர் உற்பத்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சோளம், பயறு போன்ற தானிய விளைச்சலில் ஈடுபடுபவர்களுக்கு உதவத் தயாராக உள்ளோம்.

தேயிலைக்கு பயன்படுத்தப்படும் ரி -200, ரி-750, யூ -709, யூ 834, ரி 65 உள்ளிட்ட உரங்களின் விலை கடந்த காலங்களில் பெருமளவில் அதிகரித்திருந்தது. ஆனால், அந்த விலையை எம்மால் ஓரளவு குறைக்க முடிந்தது. தற்போது மேலும் விலையை குறைக்க எதிர்பார்க்கிறோம். எனவே, அரசாங்கத்திற்கு சொந்தமான கொமர்ஷல் , சிலோன் உரத் தொழிற்சாலைகளில் மேற்படி உர வகைகளை உற்பத்திச் செய்ய எதிர்பார்த்திருக்கிறோம்.

அரசாங்கத்திற்கு சொந்தமான இரண்டு உரத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர தேயிலை உரத்தை தேயிலை தொழில்துறையினருக்கு சந்தை விலையை விடவும் குறைவாக வழங்குவதே எமது நோக்கமாகும். அதன்படி குறைந்தபட்சம் 2000 ரூபா என்ற குறைந்த விலையில் இந்த உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கமைய மானிய விலையில் உரத்தை வழங்கும்போது தேயிலை உற்பத்தியை மேம்படுத்த முடியுமெனக் கருதுகிறேன். மேலும், தேயிலை தொழில்துறையிலும் புதிய தொழில்நுட்பத்தை புகுத்த எதிர்பார்க்கிறோம்.” – என்றார்.



# மேல் மாகாணப் பாடசாலைகளில் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டன

மேல் மாகாணத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் நடத்தப்படவிருந்த மூன்றாம் தவணைக்கான சில பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

சில பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் சமூக வலைத்தளங்களில் வெளியானமையை அடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மேல் மாகாணத்தில் 10 ஆம் மற்றும் 11ஆம் தரங்களுக்கான சகல பரீட்சைகளையும் இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் எதிர்வரும் திங்கள் கிழமை நடத்தப்படவிருந்த மூன்றாம் தவணைக்கான 10 ஆம் தர ஆங்கில பாடப் பரீட்சை வினாத்தாளை ரத்து செய்வதற்கு மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இந்தப் பரீட்சையை நடத்துவதற்கான புதிய திகதியை எதிர்வரும் நாள்களில் அறிவிக்கவுள்ளோம் என சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

10 ஆம் தரத்திற்கான மூன்றாம் தவணை பரீட்சையின் ஆங்கில பாடத்திற்கான பகுதி இரண்டு என கருதப்படும் வினாத்தாள்கள் சமூக ஊடகங்களில் தற்போது கசிந்துள்ளன.

இது தொடர்பில் சப்ரகமுவ மாகாண கல்வி பணிப்பாளர் உபாலி சந்திர குமார கருத்து தெரிவிக்கையில், சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வரும் வினாத்தாளானது, மாகாணத்தில் வெளியிடப்பட்ட வினாத்தாளாக இருப்பின் உடனடியாக அது தொடர்பில் நடவடிக்கை எடுப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞான பாடத்திற்கான பகுதி இரண்டு வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

இதனையடுத்து, விவசாய விஞ்ஞான பாட வினாத்தாளை முழுமையாக ரத்து செய்து மீளவும் பரீட்சையை நடத்துவதற்கு பரீட்சைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

மேற்படி சம்பவம் தொடர்பில் அம்பாறை பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவரும் மொரட்டுவை மகா வித்தியாலத்தின் பரீட்சை நிலையத்தில் கடமையாற்றிய 52 வயதுடைய அலுவலக உதவியாளர் ஒருவரும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மாற்ற முடியாத தலைவிதி

வழமை போல இம்முறையும் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் இருந்து இலங்கை தொடர்பான மிகக் காட்டமான அறிக்கை வந்திருக்கின்றது.

ஆனால் எதேச்சாதிகாரத்தில் மூழ்கி கிடக்கும் இலங்கை ஆட்சியாளர்களை அந்த அறிக்கையும் கூட அசைக்கவோ, திருத்தவோ, ஏதேனும் சலனத்தை ஏற்படுத்தவோ போவதில்லை என்பது உறுதி.

இலங்கை தொடர்பில் தமது வாய்மூல அவதானிப்பு அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கெர் டேர்க் சமர்ப்பித்துள்ளார்.

அதிலேயே இலங்கையின் தற்போதைய ஆட்சிப் பீடத்தையும், அதிகார வர்க்கத்தையும் ஒரு பிடிபிடித்திருக்கின்றார் அவர்.

இலங்கை ஆட்சி பீடம் அண்மைக் காலத்தில் கொண்டு வந்துள்ள இணையப் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களைக் கண்காணித்துப் பதிவு செய்யும் சட்டம், எலக்ட்ரோனிக் ஊடக ஒளிபரப்பு அதிகார சட்டம் போன்றவை நிறைவேற்றதிகாரத்தை மேலும் வலுப்படுத்துகின்றன. பாதுகாப்புப் படைகளுக்கு அளவற்ற அதிகாரத்தை வழங்குகின்றன. ஒன்று கூடுதல், கூட்டாகச் செயல்படுதல், கருத்து வெளிப்படுத்துதல் முதலிய சுதந்திரங்களை மோசமாக கட்டுப்படுத்துவதன் மூலம் சிவில் இடைவெளியை மட்டுமல்லாமல் வர்த்தகத்திற்கான சூழ்நிலையையும் மோசமாகப் பாதிக்க செய்கின்றன என்பதை அவர் அப்படியே இந்த வாய்மூல அறிக்கையில் அம்பலப்படுத்தி இருக்கின்றார்.

இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு யுத்தம் நிறைவடைந்து இந்த வருடத்துடன் 15 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. எனினும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இன்னமும் அக்கறை செலுத்தப்படாமல் உள்ளது.

காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களைத் தொடர்ந்தும் தேடி வருகின்றனர். அவர்கள் அச்சுறுத்தல்கள், கைதுகள், வன்முறைகளையும் எதிர்கொள்கின்றனர்.

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் காணிப் பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றமையால், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அதிகாரப் பரவலாக்கத்திற்கான வழிமுறைகளாக உறுதியளிக்கபட்டிருந்தாலும் தற்போது அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று சுமார் 5 வருடங்களாகின்ற போதிலும், உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் மத்தியிலும் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்ந்தும் உண்மை மற்றும் நீதியைத் தேடிக்கொண்டு இருகின்றனர்.

உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவிற்கான சட்ட வரைவொன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள போதிலும், நம்பத்தகுந்த உண்மைகளைக் கண்டறிவதற்கான சூழல் இல்லை.

- இப்படி எல்லாம் அப்பட்டமாக - பட்டவர்த்தனமாக - வெளிப்படையாக - நேரடியாக - ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்திருக்கின்றார்.

ஆனால் இது குறித்து எல்லாம் இலங்கை அரசோ, அதிகார பீடமோ, ஏன் தென்னிலங்கை அரசியல் தரப்புகளோ கவலைப்படவோ, அலட்டிக் கொள்ளவோ போவதில்லை.

இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை பிரேரணைகளைக் கொண்டு வந்து, தீர்மானங்களை நிறைவேற்றும் மேற்கு நாடுகளும் அதற்கு மேல் இவ்விடயங்களில் தலையிட மாட்டா. நடந்த சம்பவங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டி, பொறுப்பு கூறலை நடைமுறைப்படுத்தச்செய்து, குற்றம்இழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, உண்மைகளைஅம்பலப்படுத்தச் செய்து, மீள நிகழாமையை உறுதிப்படுத்தி, இழப்பீடுகளை வழங்கச் செய்வதற்கு அவை ஏதும் காத்திரமாகச் செய்யப் போவதில்லை.

அதனால் அடக்கு முறையும் எதேச்சாதிகாரமும் இலங்கை தீவில் மாற்ற முடியாத தலைவிதியாகத் தொடரப் போவது தவிர்க்க இயலாதது.

# மோடி மீண்டும் வாரணாசியில் போட்டி; பா.ஜ.க. வேட்பாளர் பட்டியல் வெளியீடு



மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் 195 வேட்பாளர்கள் அடங்கிய முதல்கட்ட பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

பிரதமர் மோடி மீண்டும் வாரணாசி தொகுதியில் போட்டியிட உள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், 195 வேட்பாளர்கள் அடங்கிய முதல்கட்ட பட்டியலை பா.ஜ.க. வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பில் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பா.ஜ.க. தேசிய பொதுச் செயலாளர் வினோத்தாவ்டே, பா.ஜ.கவின் முதல்கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்

“195 வேட்பாளர்கள் அடங்கிய பட்டியல் தற்போது முடிவாகி இருக்கிறது. இது பா.ஜ.கவின் முதல்கட்ட வேட்பாளர் பட்டியல். 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் வேட்பாளர்கள் இதில் இடம் பெற்றுள்ளார்கள்.

உத்தரப் பிரதேசத்தில் 51 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள், மேற்கு வங்கத்தில் 20, டெல்லியில் 5, கோவா மற்றும் திரிபுராவில் தலா ஒன்று என வேட்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள். இந்த முதல்கட்ட பட்டியலில் மத்திய அமைச்சர்கள் 34 பேர், மக்களவை சபாநாயகர், இரண்டு முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள். 28 பெண் வேட்பாளர்கள், 47 இளம் தலைவர்கள் இந்தப் பட்டியலில் உள்ளார்கள்.

பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் மீண்டும் போட்டியிட இருக்கிறார். மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குஜராத்தின் காந்தி நகர் தொகுதியிலும், சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா போர்பந்தர் தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். மத்திய அமைச்சர் சர்பானந்த சோனாவால் அசாமின் திப்ருகர் தொகுதியிலும், மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு அருணாச்சலப் பிரதேசம் தொகுதியிலும் போட்டிடுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த முடிவுகளை எடுத்துள்ளது. வரக்கூடிய மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. 370 தொகுதிகளிலும், தேசிய ஜனநாயக கூட்டணி 400 தொகுதிகளிலும் வெற்றி பெற வேண்டும் என்பதையே கட்சி சங்கல்பமாக எடுத்துள்ளது” – என்றார்.

# அ.தி.மு.க. மகளிர் துணைச் செயலாளராக நடிகை காயத்ரி ரகுராம் நியமிக்கப்பட்டார்



அ.தி.மு.க. மகளிர் அணி துணைச் செயலாளராக காயத்ரி ரகுராமை நியமித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், “அ.தி.மு.கவின் மகளிர் அணி துணைச் செயலாளர் பொறுப்பில் காயத்ரி ரகுராம் இன்று முதல் நியமிக்கப்படுகிறார். அதி.மு.கவினர் இவருக்கு முழு ஒத்துழைப்பு நல்க கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடிகையும், நடனக் கலைஞருமான காயத்ரி ரகுராம் பல ஆண்டுகளாக பா.ஜ.கவில் செயல்பட்டு வந்தவர். தமிழக பா.ஜ.கவில் வெளிநாடு மற்றும் பிற மாநில தமிழ் வளர்ச்சிப் பிரிவு தலைவராகவும் இருந்து வந்தார்.

இந்தச் சூழலில், கடந்த ஆண்டு ஜனவரியில், கனத்த இதயத்துடன் பா.ஜ.கவில் இருந்து விலகுகிறேன். விசாரணைக்கு வாய்ப்பு கொடுக்காத, பெண்களுக்கு சம உரிமையும் மரியாதையும் கொடுக்காத காரணங்களுக்காக தமிழக பா.ஜ.கவில் இருந்து விலகுகிறேன் என்று அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து, சமூக வலைதளங்களில் தமிழக பா.ஜ.கவையும், அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலையையும் விமர்சித்து வந்தார்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியில் இணைவார் என தகவல் பரவிய நிலையில், கடந்த ஜனவரி 19 ஆம் திகதி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அக்கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். இந்நிலையில், அவருக்கு தற்போது பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




# அ.தி.மு.க, பா.ஜ.கவுடன் ச.ம.க. கூட்டணி பேச்சு

## சரத்குமார் தகவல்

“அ.தி.மு.க, பா.ஜ.கவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. தேர்தல் தேதி அறிவிப்புக்குப் பிறகு கூட்டணி அறிவிக்கப்படும்.”

– இவ்வாறு சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் தெரிவித்தார்.

மதுரை காமராஜர் சாலையில் புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சமத்துவ மக்கள் கட்சி தலைவர் நடிகர் சரத்குமார் கலந்து கொண்டார். இதன்போது அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

“தி.மு.க. தவிர அ.தி.மு.க, பா.ஜ.க. நிர்வாகிகள் என்னிடம் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பிறகு கூட்டணி அறிவிக்கப்படும். மக்களின் முன்னேற்றம், வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும், தொழில் வளத்தை அதிகரிக்க வேண்டும் என்பது எங்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

தமிழகத்தில் மட்டும் அல்ல, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட தென் மாவட்டங்களிலும் போதை கலாச்சாரம் பெருகியுள்ளது. இதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் தான் கட்டுப்படுத்த முடியும். பின்னணியில் பெரும் புள்ளிகள் இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.

# காசாவில் வீடுகள் மீதான தாக்குதலில் 17 பேர் உயிரிழப்பு; 100 பேர் காயம்





மத்திய காசா பகுதியில் உள்ள வீடுகள் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் - காசா இடையே தொடங்கிய போர் இன்னும் நீடித்து வருகிறது. இருதரப்பு போரை நிறுத்தக்கோரி பல்வேறு நாட்டுத் தலைவர்களும் கோரிக்கை வைத்து வருகின்றனர். இருப்பினும் இன்னும் காசாவில் போர் ஓய்ந்தபாடில்லை.

நாளுக்கு நாள் உயிரிழப்புகள் அதிகரித்து வண்ணம் இருக்கின்றன. மக்களுக்கு அடிப்படை உணவான மாவும், தண்ணீரும் கிடைக்காமல் திண்டாடி வருகின்றனர். இது தொடர்பான காணொலிகள் வெளியாகி மக்களை கவலையடைய வைக்கிறது.

இதற்கிடையே காசாவில் போர் நிறுத்த பேச்சுவார்த்தை குறித்து கட்டார், எகிப்து வெளியுறவு அமைச்சர்கள் விவாதித்து வருகின்றனர்.

குண்டு சத்தங்கள் இல்லாத அமைதியான காசாவை, அப்பாவி மக்கள் காண ஆவலோடு இருக்கின்றனர். கடந்த வியாழக்கிழமை உணவுக்காக காத்திருந்த பொதுமக்கள் மீது இஸ்ரேலிய வீரர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இது குறித்து அல்-அவ்தா மருத்துவமனையின் இயக்குனர் கூறுகையில்,

“மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட காயமடைந்தவர்களில், 80 சதவீதம் பேர் சுடப்பட்ட நிலையில் இருந்தனர்” என்றார்.

அதன் தொடர்ச்சியாக, மத்திய காசா பகுதியின் டெய்ர் எல்-பாலா மற்றும் ஜபாலியா நகரில் உள்ள வீடுகளை குறி வைத்து இஸ்ரேல் நடத்திய விமானப் படை தாக்குதலில் 17 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் காயமடைந்துள்ளனர்.

காசாவில் இதுவரை 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 71 ஆயிரத்து 533 பேர் காயமடைந்துள்ளனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது. ஹமாஸ் தாக்குதலால் இஸ்ரேலில் 1,139 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசாவின் மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியினர் இப்போது பஞ்சத்தின் ஆபத்தில் இருகின்றனர். மருந்துகளின் பற்றாக்குறை மற்றும் மருத்துவ பராமரிப்பு பற்றாக்குறையால் தொற்று நோய்களின் பாதிப்பு அதிகரித்துள்ளதாக ஐ.நா. எச்சரித்துள்ளது.

# இந்திய நடனக் கலைஞர் அமெரிக்காவில் கொலை



இந்தியாவைச் சேர்ந்த நடனக் கலைஞர் அமர்நாத் கோஷ், அமெரிக்காவில் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் கல்வி கற்கும் இந்தியர்கள் சந்தித்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்கள் வெளியாகி வரும் நிலையில், இந்தியாவைச் சேர்ந்த அமர்நாத் கோஷ் என்ற நடனக் கலைஞர், மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவைச் சேர்ந்தவர் அமர்நாத் கோஷ். இவர் ஒரு சிறந்த பரதநாட்டியம் மற்றும் குச்சுப்புடி நடனக் கலைஞர் ஆவார்.

சென்னையில் உள்ள கலாஷேத்ரா அகாடமியின் முன்னாள் மாணவரான இவர், டெல்லியில் உள்ள சர்வதேச கலாச்சார அமைச்சகத்திடம் இருந்து குச்சிப்புடிக்கான தேசிய உதவித் தொகையையும் பெற்றுள்ளார். மேலும், புகழ்பெற்ற நடனக் கலைஞர்களான போபிதா டே சர்க்கார், ஸ்ரீஎம்.வி.நரசிம்மாச்சாரி, பத்மஸ்ரீ அடையார் கே.லக்ஷ்மண் ஆகியோரிடம் பயிற்சி பெற்றவர்.

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் உள்ள வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் அவர் கல்வி கற்று வந்துள்ளார். அவர் கல்வி நிலையம் அருகே நடைபயிற்சியில் ஈடுபட்டு இருந்தபோது, மர்ம நபர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதனை அவரது நண்பரும், தொலைக்காட்சி நடிகையுமான தேவலீனா பட்டாச்சார்ஜி, சிக்காகோவில் உள்ள இந்திய தூதரக அலுவலகத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

இதனையடுத்து, இந்திய தூதரகம் வெளியிட்ட தகவலில்,

“அமர்நாத் கோஷ் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம். பொலிஸார் மற்றும் தடயவியல் நிபுணர்களின் அறிக்கையை கவனித்து வருகிறோம். அமர்நாத் கோஷின் உறவினர்களுக்கு தேவையான உதவிகள் செய்யப்படும். இந்தச் சம்பவத்தை பொலிஸார் மற்றும் கல்வி நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளோம்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அஞ்சல் திணைக்களத்தின் வியாபாரத்தை மேம்படுத்துவதற்கு நிகழ்ச்சி திட்டப் பேரணி

**(பாறுக் ஷிஹான்)**

அஞ்சல் திணைக்களத்தின் புதிய நடைமுறையின்படி வியாபாரத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் கல்முனை நகரை மையப்படுத்தி கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்எம். பைஸர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி திட்டம் அஞ்சல் மா அதிபரின் எண்ணக்கருவின் அடிப்படையில், கிழக்கு மாகாண அஞ்சல் மா அதிபதி எம்.எச்.எம்.அஸ்லம் வழிகாட்டலில், அக்கரைப்பற்று - அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பியந்தவின் பங்கேற்புடன் கல்முனை அஞ்சல் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமாகி தரவைப்பிள்ளையார் கோவில் அருகில் சென்று மீண்டும் கல்முனை பிரதம அஞ்சல் அலுவலகத்தைப் பேரணி வந்தடைந்தது.

இந்தப் பேரணியில் அஞ்சல் திணைக்களத்தின் புதிதாக நடைமுறைப் படும் திட்டங்களான CASH ON DELIVERY SERVICE › EMS, SL POST COURIER SERVICE உள்ளிட்ட சேவைகள் தொடர்பான விழிப்பூட்டல் துண்டுப்பிரசுரம் மூலம் நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் இடையே விரிவாக வழங்கப்பட்டது.

இந்தப் பேரணியில் அக்கரைப்பற்று - அம்பாறை பிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ்.பியந்த, கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்எம். பைஸர், உட்பட அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்களும் பங்கேற்றமை சுட்டிக்காட்டத்தக்கது.











# உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு!

உணவுப்பொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளன என அகில இலங்கை உணவக மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேநீர் 5 ரூபாவினாலும் கொத்து மற்றும் ப்ரைட்ரைஸ் 50 ரூபாவினாலும், பால் தேநீர் 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உணவுப் பொதி 25 ரூபாவினாலும், பரோட்டா மற்றும் முட்டை ரொட்டி 10 ரூபாவினாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே விலை அதிகரிக்கப்பட்ட மூலப்பொருள்களின் விலைகள் குறைக்கப்படாமையினால் இநந்த் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

### இளம்பெண்ணை தாக்கிய குற்றச்சாட்டு:

# ஊவா மாகாண ஆளுநர் முஸம்மிலின் மகனுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை

இளம்பெண் ஒருவரைத் தாக்கிக் காயமேற்படுத்தியமை தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் மகனுக்கு வெளிநாடு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸ்ஸம்மிலின் மகனால் யுவதி ஒருவர் தாக்கப்பட்டார் என வெள்ளவத்தை பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஹெவ்லொக் பார்க் வீதியிலுள்ள வீடொன்றில் வசித்து வந்த யுவதி ஒருவரே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவத்தின் பின்னர் அவர் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.




மேற்படி பெண் தாக்கப்பட்டமை தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து, பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் மகன் தற்போது தலைமறைவாகியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் கல்கிசை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மிலின் மகனுக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.






# ‘பொன் அணிகளின் போர்’ நேற்று சமனிலையில் முடிவு

(பிரபாகரன் டிலக்சன்)

“பொன் அணிகளின் போர்“ என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 107ஆவது துடுப்பாட்ட போட்டி சமநிலையில் முடிவுற்றது.

107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்டப் போட்டி நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

சியாந்சன் தலைமையிலான பத் திரிசியார் கல்லூரியும், நர்தனன் தலைமையிலான வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் 107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்ட போட்டியில் களமிறங்கின.

நாணய சுழற்சியில் வென்ற புனித பத்திரிசியார் கல்லூரி முதலில் களத் தெடுப்பை தீர்மானித்தது. அதற்கமைய முதலில் துடுப்படுத்தாடிய யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை கல்லூரி 80.2 ஓவர் களில் நிறைவில் அனைத்து விக் கெட்டுகளையும் இழந்து 189 ஓட் டங்களை பெற்றுக் கொண்டது. அணி சார்பில் ஜோன்சன் 63 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

புனித பத்திரிசியார் கல்லூரி சார்பில் பந்துவீச்சில் செகான், அபிலாஷ் தலா 3 இலக்குகளை வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங் ஸில் துடுப்பெடுத்தாடிய புனித பத் திரிசியார் கல்லூரி 60.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அணி சார்பில் மதுசன்39 ஒட்டங்களை அதிகபட்சமாக பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் யாழ்ப்பாண கல்லூரி வீரர் விஷ்ணுகோபன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு இரண்டாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூ ரி 41 ஓவர்களில் 7 இலக்குகளை இழந்து 93 ஓட்டங்களை பெற்றபோது ஆட் டத்தை இடைநிறுத்தியது. அணி சார் பில் விஷ்ணுகோபன் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்துவீச்சில் சாருசன் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

137 ஓட்டங்களை வெற்றியிலக் காக கொண்டு இரண்டாம் இனிங் ஸில் துடுப்பெடுத்தாடிய புனித பத்திரி சியார் கல்லூரி 13 ஓவர்களில் 5 இலக் குகளை இழந்து 25 ஓட்டங்களை பெற்றபோது ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனடிப்படையில் 107ஆவது பொன் அணிகளின் போர் துடுப்பாட்ட போட்டி வெற்றி தோல்வி இன்றி சமநிலையில் முடிவுற்றது.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜோன்சன், சிறந்த பந்துவீச்சாளராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் விஷ்ணு கோபன், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் ஜோன்சன், சிறந்த சகலதுறை வீரராக புனித பத் திரிசியார் கல்லூரி வீரர் சாருஜன், போட்டி யின் ஆட்டநாயகனாக யாழ்ப்பாணக் கல்லூரி வீரர் விஷ்ணுகோபன் ஆகி யோர் தெரிவானார்கள்.














# நீதிமன்றத்தில் சரணடைந்த தமிழரசு!



புருஜோத்தமன் தங்கமயில்


இலங்கைத்தமிழரசுக்கட்சியின்தலைவர் தெரிவு மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தெரிவை யாப்பு வரையறைகளுக்கு அமைவாக நடத்துவதற்கு இணங்குவதாக தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள், திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். யாப்பு மீறல்களோடு நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவு, மத்திய செயற்குழு தெரிவை இரத்து செய்யவும், தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கக் கோரியும் திருகோணமலை நீதிமன்றத்தில், தமிழரசுக் கட்சி உறுப்பினரான சந்திரசேகரம் பரா வழக்குத் தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு தொடர்பில் பிரதிவாதிகள் சார்பில் வாதாடிய சட்டத்தரணிகளே, நீதிமன்றத்தில் கட்சித் தெரிவுகள் யாப்பினை மீறி இடம்பெற்றிருப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அத்தோடு, யாப்பு ஒழுங்குக்கு அமைவாக மீண்டும் தெரிவுகளை நடத்துவதற்கும் இணங்கியிருக்கிறார்கள். இதனை அடுத்து வழக்கு, இன்னொரு பிரதிவாதியான எம்.ஏ.சுமந்திரனின் கருத்துக்களை அறிந்து, வழக்கின் போக்கினை தீர்மானிப்பதற்காக ஏப்ரல் 05ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

அதுபோல, தமிழரசுக் கட்சியின் பொதுக் குழுவை மீண்டும் கூட்டுதல் மற்றும் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கும், திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கின் போக்கினை அறிந்து முடிவெடுப்பதற்காக ஏப்ரல் இறுதி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் தெரிவுகள் மற்றும் தேசிய மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றம் சென்றவர்கள், கட்சிக்கு துரோகம் இழைக்கிறார்கள் என்று கட்சியின் புதிய தலைவராக தெரிவாகி, இப்போது தெரிவு பிழையென ஏற்றுக் கொண்டிருக்கும் சிவஞானம் சிறீதரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் குற்றஞ்சாட்டியிருந்தார்கள். அத்தோடு, எந்தவொரு தருணத்திலும் வழக்குத் தொடர்ந்தவர்களுடன் எந்த இணக்கப்பாடுகளுக்கும் செல்லமாட்டோம். நீதிமன்றத்தில் வழக்கினை உடைத்து வெற்றிபெறுவோம் என்றும் வாய்சவடால்களை அடித்திருந்தார்கள். ஆனால், அவையெல்லாம் ஊடக உளறல்களாக மட்டுமே முடிந்திருக்கின்றன. ஆனால், யதார்த்தம் என்ன என்பதை உணர்ந்து நீதிமன்றத்தின் முன்னால் சரணடைந்திருக்கிறார்கள். இந்தச் சரணடைவு என்பது ஒப்பீட்டளவில் காலம் கடந்ததுதான். ஆனாலும் இதனை ஏற்பதைத் தவிர தமிழரசுக் கட்சிக்கு முன்னால் எந்தத் தெரிவுகளும் இப்போது இல்லை என்பதே உண்மை.

தற்போது இருக்கும் தமிழ் அரசியல்வாதிகளில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரைத் தவிர முக்கியஸ்தர்களாக இருக்கும் அனைவரும் ஆயுதப் போராட்ட காலத்திலும் அதற்குப் பின்னராவும் அரசியலுக்குள் வந்தவர்கள். இவர்களிடத்தில் ஆயுதப் போராட்ட இயக்கங்களின் தீர்மானங்களின் குணங்குறிகள் அதிகமாகவே ஆளுமை செலுததுகின்றன. அதாவது, தாங்கள் எடுப்பதுதான் முடிவு, அதனை ஏற்றுக்கொண்டால் இருங்கள், இல்லையென்றால் விலகிவிடுங்கள் அல்லது விலக்கப்படுவீர்கள் என்பதுதான் அது. ஆனால், தற்போதுள்ள ஜனநாயக அரசியல் களத்தில் இந்த ஆயுத இயக்க வழிமுறை பெரிதாக உதவாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் தமிழரசுக் கட்சித் தலைவராகவும் சம்பந்தன், கடந்த பொதுத் தேர்தல் வரையில் ஆயுத இயக்கத் தலைவர் ஒருவர் கொண்டிருக்கும் அதிகாரத்தை ஒத்த அதிகாரங்களோடுதான் வலம் வந்தார். கடந்த தேர்தலுக்குப் பின்னர், அவரின் பிடி வெகுவாக தளர்ந்தது. அதற்கு அவரது வயது மூப்பும் உடல் தளர்வும் பெரிய காரணங்களாகின. மாவை எப்போதுமே முடிவுகளை எடுக்கும் தலைவராக இருந்ததில்லை என்பதால் அவர் பெரிய தலைமைத்துவ தாக்கங்களைச் செலுத்தவில்லை. மாறாக, கட்சியை குழப்பங்களுக்குள் தள்ளும் வேலைகளையே ஆரம்பத்தில் இருந்து செய்து

தொடர்ச்சி ▼





# நீதிமன்றத்தில் சரணடைந்த தமிழரசு!

தொடர்ச்சி ▲

வந்திருக்கிறார்.

ஆயுதப் போராட்ட இயக்கங்களின் ஆளுமையோடு அல்லது அதனை ஒட்டிய ஒழுங்கோடு அரசியலுக்குள் வந்தவர்கள், தங்களையும் அப்படியாக நினைக்க தலைப்பட்டதன் விளைவுதான், நீதிமன்றத்தில் தமிழரசுக் கட்சியை சரணடைய வைப்பதற்கும் காரணமாகியிருக்கின்றது. தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் இருந்து, கட்சியின் வட்டாரக்கிளை தொடங்கி தொகுதிக்கிளை, மாவட்டக்கிளை தெரிவுகள் வரையில் கட்சியின் யாப்பு முறைமை பின்பற்றப்படவில்லை என்று பல தடவைகள் கட்சியின் முக்கியஸ்தர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டது. அதுபோல, பொதுக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 166ஐ தாண்ட முடியாது என்பதுவும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், அதனை கட்சித் தலைவர் மாவையோ, தலைவர் தெரிவுக்கு போட்டியிட்ட சிறீதரனோ, சுமந்திரனோ, சீ.யோகேஸ்வரனோ கேட்டுக்கொள்ளவில்லை. மாறாக, எப்படியாவது தலைவர் தெரிவை நடத்தி கட்சியை கைப்பற்றிவிட வேண்டும் என்ற எண்ணப்பாடே அவர்களிடம் இருந்தது. கட்சித் தலைவர் ஆகிவிட்டால், கட்சி ஒட்டுமொத்தமாக தன்னுடைய கட்டுக்குள் வந்துவிடும் என்று அவர்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை ஆயுத இயக்க ஒழுங்கின் போக்கில் வருவது. ஆனால், தமிழரசுக் கட்சியோ யாரும் சர்வாதிகார ஆளுமை செலுத்தும் வகையான ஏற்பாடுகளை யாப்பில் கொண்டிருக்கவில்லை. ஜனநாயக கட்டங்களை வலுப்படுத்தும் வரையறைக் கொண்டது. அதனை யாரும் தலைக்குள் எடுக்காததன் விளைவாக, தலைவர் தெரிவில் போட்டியிட்டவர்களும், அவர்களுக்காக இயங்கியவர்களும் தாங்கள் நினைத்ததையெல்லாம் கட்சிக்குள் செய்துவிடலாம் என்று நினைத்தார்கள்.

சிறீதரன் தலைவராக தெரிவானதும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட சுமந்திரனையும் அவரது ஆதரவாளர்களையும் கட்சிக்குள் இருந்து அகற்ற வேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்களே கூட்டங்களைக் கூட்டிப் பேசினார்கள். குறிப்பாக, சிறீதரனை வரவேற்று மன்னாரில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சி கூட்டத்தில் பா.அரியநேத்திரன் உள்ளிட்ட சிறீதரன் ஆதரவாளர்கள் சுமந்திரனை கடுமையாக விமர்சித்தார்கள். அத்தோடு, அவர்களை அகற்ற வேண்டும் என்ற தொனியிலும் பேசினார்கள். ஆனால், கூட்டத்தில் இருந்தவர்கள் அதற்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்ததும், அதனைக் கைவிட்டு அரியநேத்திரன் உள்ளிட்டவர்கள் அமைதியானார்கள். அதே அரியநேத்திரன்தான், கட்சியின் யாப்பை மீறிய செயற்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டதும், சர்வதேச விசாரணை கோரும் தமிழரசுக் கட்சியை உள்நாட்டு நீதிமன்றத்தில் முன்னிறுத்தியிருக்கிறார்கள் என்று கட்டுரை எழுதியிருக்கிறார். அத்தோடு, தமிழரசுக் கட்சி தொடர்ச்சியாக யாப்பு மீறல்களை செய்திருப்பதாகவும் ஒப்புக்கொள்கிறார். அப்படியான நிலையில், தற்போது யாப்பு மீறல்களுக்கு எதிராக கேள்வி எழுப்பியவர்களை அவர் துரோகிகள் எனும் தோரணையில் விளிக்கிறார். மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான அரியநேத்திரன், நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அப்படிப்பட்ட ஒருவரே, எந்தவித அடிப்படைத் தெளிவும் அற்று, பதவிகளை மாத்திரம் இலக்கு வைத்து ஆடப்படும் ஆட்டத்தில் அம்பாக நின்று முறிகிறார். புதிய மத்திய செயற்குழு தெரிவு, பொதுக்குழுவில் வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் குழப்பங்கள் விளைவிக்கப்படாமல் இருந்திருந்தால், சிலவேளை கட்சியின் தேசிய மாநாடு நடைபெற்று, அந்தத் தீர்மானங்கள் தேர்தல் திணைக்களத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும். இன்று நீதிமன்றங்களின் முன்னால் சரணடைய வேண்டியும் ஏற்பட்டிருக்காது.

தங்களின் தீர்மானங்களை ஆதரிக்காதவர்களை விரட்டும் மனநிலையைக் கடந்து நின்று இயங்க வேண்டிய தேவை ஜனநாயக விழுமியங்களைப் பேணும் கட்சிக்குள் இருப்பவர்களுக்கு வேண்டும். அதற்குத் தயாராக இல்லாதவர்கள் தனித்தனிக் கட்சிகளை தாங்களே ஆரம்பித்து நடத்த வேண்டும். அவை, குடும்பக் கட்சிகளாக நீடிக்கலாம். தமிழரசுக் கட்சிக்குள் வரும் யாராக இருந்தாலும் அந்தக் கட்சியின் அடிப்படை யாப்பினையும் ஒழுங்கினையும் புரிந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் இப்படித்தான், கட்சியை நீதிமன்றங்களுக்குள் கொண்டு சென்று முடக்குவீர்கள். இப்போதுதான், தமிழரசுக் கட்சியின் தலைவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலருக்கு கட்சியின் யாப்பு என்ன சொல்கின்றது, அதனை மீறினால் என்ன சிக்கல்களையெல்லாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்ற புரிதல் ஏற்பட்டிருக்கும். இப்போது, நீதிமன்றத்திடம் யாப்பு ஒழுங்குக்கு அமைவாக இயங்க ஒப்புக்

தொடர்ச்சி ▼

# நீதிமன்றத்தில் சரணடைந்த தமிழரசு!

தொடர்ச்சி ▲

கொண்டாகிவிட்டது. ஆனால், இனித்தான், அடுத்த அடுத்த கட்டங்களில் சிக்கல்கள் தடைக் கற்களாக வரப்போகின்றன. ஏனெனில், வட்டாரக் கிளை தொடங்கி மாவட்டக் கிளை வரையில் தனக்குச் சார்பானோருக்கே பதவிகளை வழங்கும் போக்கு மாவை உள்ளிட்ட முக்கியஸ்தர்களினால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தனிப்பட்ட விரோதங்களினால் பலரும் அதிகார வரம்புக்கு அப்பால் சென்று விலக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படியான நிலையில், அவர்கள் யாரும் நீதிமன்றத்தை நாடினால், தமிழரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் பல ஆண்டுகள் இழுபடும். அத்தோடு கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக கட்சித் தெரிவுகள் எவையும் நடைபெற்றிருக்காத நிலையில், கட்சியை சவாலுக்கு உட்படுத்தி தென் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இன்றைக்கு தமிழரசுக் கட்சி எதிர்கொண்டு நிற்கும் முடக்க நிலை, கட்சியின் பெருந்தலைவர், தலைவர் தொடங்கி முக்கியஸ்தர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள். ஏனெனில், அவர்களுக்குக் கட்சியைப் பற்றிய அக்கறையைக் காட்டிலும் தங்களின் பதவிகள், அவற்றின் மூலம் எவ்வாறான தனிப்பட்ட ஆதாயங்களை அடையலாம் என்பதெல்லாம் முதன்மைக் காரணிகளாக இருந்திருக்கின்றன. அதனால்தான், வெளிச் சக்திகளும், பணமுதலைகளும் கட்சியை கைப்பற்ற முயல்கின்றன.

"...நான் கட்சிக்காக பல லட்சம் ரூபாய்களைச் செலவளித்திருக்கிறேன். அதற்கான பிரதிபலனைக் கட்சி செய்ய வேண்டும். அதனால்தான், மத்திய செயற்குழு தெரிவு, பொதுக்குழு வாக்கெடுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் குழப்பம்





இலங்கை இனவாதிகள் யாராவது நீதிமன்றத்தை நாடினால், தமிழரசுக் கட்சி என்கிற தமிழ் மக்களின் முதன்மைக் கட்சி ஒட்டுமொத்தமாக முடங்கும் அச்சுறுத்தலும் முன்நின்று ஆடுகின்றது.

ஏற்கனவே, தமிழரசுக் கட்சி பிரிவினையை ஊக்குவிக்கின்றது என்று சுட்டிக்காட்டி கட்சியைத் தடை செய்யக் கோரி வழக்கொன்று தென் இலங்கை இனவாதிகளினால் தொடுக்கப்பட்டு, மயிரிழையில் தப்பிப் பிழைத்திருக்கின்றது. சமஷ்டி என்பது பிரிவினைக் கோரிக்கையல்ல என்று உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால், கட்சி தப்பித்தது. எப்போதுமே தென் இலங்கை நீதிக்கட்டமைப்பு ஒரே மாதிரியாக இருக்கும் என்று கொள்ள முடியாது. அது, அதிக தருணங்களின் அதிகார – இனவாதத் தரப்புக்களின் இழுப்புக்கு இழுபடும் ஒன்றாகவே இருந்திருக்கின்றது. அப்படியான நிலையில், அரசியல் விடுதலைப் போராட்டத்தினை பெரும் அடக்குமுறைகளுக்குள்ளும் சட்ட கட்டுப்பாடுகளுக்குள்ளும் நின்று முன்னெடுக்கும் தமிழ்த் தரப்பு தன்னுடைய நிலையைப் பாதுகாப்பதில் அதிக கவனத்தோடு இருக்க வேண்டும். அப்படியான நிலையில், தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் அரசியல் இலக்கைக் காப்பாற்றுவதில் கவனமாக இருக்க வேண்டும். அதற்கு முதலில் கட்சியை கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும். மாறாக, இருக்கும் வரையில் பதவிப் பகட்டை அனுபவித்துவிட்டு செல்வோம் என்பதற்காக தகிடுதித்தங்களையும் முறையற்ற செயற்பாடுகளை ஊக்குவிப்பதும் ஒருபோதும் விளைவித்தோம். நாங்கள் தொடர்ந்து செலவளிக்க வேண்டும். ஆனால், எங்களுக்கு எந்தப் பதவியும் தரமாட்டார்கள் என்றால் எப்படி..?" என்று மாவையினால் பொதுக்குழு உறுப்பினராக முறையற்ற ரீதியில் உள்வாங்கப்பட்ட நபர் ஒருவர், அண்மையில் பலர் முன்னிலையில் கூறியிருக்கின்றார். இது மாதிரியாகவே, கட்சித் தலைவர் தெரிவின் போதும், வேட்பாளராக போட்டியிட்டவர்களில் ஒரு சிலர் மற்றவர்களின் ஆதவரைக் கோருவதற்காக பதவிகளை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியளிப்புத்தான், மத்திய செயற்குழு தெரிவுகள் பொதுக்குழுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரும் குழப்பங்கள் ஏற்படக் காரணமாகின. கட்சியை தனிப்பட்ட சொத்தாக கருதியதன் விளைவாகவே இவ்வாறான வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவை, கட்சியின் அடிப்படை ஜனநாயக மரபுக்கே எதிரானது. இனியாவது, தனிப்பட்ட நலன்களுக்கு அப்பாலான ஒழுங்கில் நின்று இயங்குவதற்கு தமிழரசுக் கட்சியினர் தயாராக இருக்க வேண்டும். இல்லையென்றால், நீதிமன்றங்களில் ஒவ்வொரு நாளும் அல்லாட வேண்டி வரும். அது, அந்தக் கட்சியினருக்கும் தமிழ் மக்களுக்கும் நல்லதல்ல. ஏனெனில், தமிழ்த் தேசியப் பரப்பில் வடக்குக் கிழக்கு பூராவும் பரந்துபட்டு ஆளுமை செலுத்தும் வேறு எந்தக் கட்சியும் தமிழ் மக்களிடம் இல்லை.

# இன்றைய ராசி பலன்கள் - 03.03.2024




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. அதிகரிக்கும் பொறுப்புகளை சுமையாக உணர்வீர்கள். நல்ல பலன்களைக் காண அமைதியாக செயல்பட வேண்டும்.

கூடுதல் பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக ஈடுபடுவீர்கள். உங்கள் பணிகளை திட்டமிடுவதன் மூலம் குறித்த நேரத்துக்குள் முடிக்க இயலும்.

உங்கள் துணையுடன் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும். இதனால் இருவருக்கும் மகிழ்ச்சி கிடைக்கும். அனுசரித்துப் போவதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பயணத்தின் போது பண இழப்புக்கான வாய்ப்புக் காணப்படுகின்றது. பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. தூக்கமின்மையாலும் பாதிக்கப்படலாம்.




இன்று கவலையை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழுங்கள்.

அதிகப் பணிகள் காரணமாக இன்று வேலை செய்வதில் மூழ்கி இருப்பீர்கள். சமயோசித புத்தியை பயன்படுத்தினால் வெற்றி காணலாம்.

உங்கள் பதட்டமான உணர்வை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனைத் தவிர்த்தல் நலம். அமைதியான போக்கை கடைபிடிக்க வேண்டும்.

பண வரவு மகிழ்ச்சி அளிக்காது. பணம் குறைந்த அளவில் காணப்படும். சேமிப்பதற்கான வாய்ப்புக் குறைந்து காணப்படும். இதனால் உங்களுக்கு கவலை ஏற்படும்.

சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பது கடினம். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த பலன்கள் கிடை க்கும். நீங்கள் உறுதியுடனும் தைரியத்துடனும் காணப்படுவீர்கள். இதன் மூலம் சீரான பலன்களைப் பெறலாம்.

நீங்கள் உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். பணியிடத்தில் உங்களுக்கு சாதகமான பலன்களும் வெற்றியும் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பொறுப்பாக நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு அதிகமாக காணப்படும். கையிலுள்ள பணத்தை ஆக்க பூர்வமான விஷயங்களுக்குச் செலவு செய்வீர்கள்.

இன்று ஆற்றல் நிறைந்து காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பயனுள்ள பலன்கள் கிடைக்கும். உங்கள் நம்பிக்கையான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைப்பதற்குத் திட்டமிட வேண்டியது அவசியம்.

பணிகள் அதிகமாக காணப்பட்ட போதிலும் குறித்த நேரத்திற்குள் அதனை முடிப்பீர்கள். பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் இணைந்து செயல்படுவீர்கள். இனிமையான வார்த்தைகள் பேசி உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்.

இன்று அதிக பணம் காணப்படும். பணத்தை சுப காரியங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

உங்களின் உற்சாகமான போக்கின் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல. இன்று அமைதியற்ற மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்களிடம் காணப்படும். மற்றவர்களுடன் உரையாடும் போது பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும். பிரார்த்தனை மூலம் சூழ்நிலையைக் கையாளும் நம்பிக்கையைப் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க இன்று பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்ளும் வாய்ப்புள்ளதால் பொறுமையை கடைபிடிக்க வேண்டும்.




உங்கள் திறமைகளை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும் என்பதால் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் முன்னேற்றத்தில் மந்த நிலை காணப்படும். அதிகமாக சிந்திக்காமல் தெளிவான மன நிலையுடன் இருங்கள்.

இன்று பணிகள் சலிப்பைத் தரும் வகையில் இருக்கும். அதிக பணிகள் காரணமாக சில பணிகள் நிலுவையில் இருக்கும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.நீங்கள் அமைதியான நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. உங்களின் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் இடம் பெறும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். கடவுளின் ஆசியால் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.

பணியில் உங்களது அபாரமான செயல் திறன் காரணமாக உங்கள் மேலதிகாரிகளிடம் உங்கள் நன்மதிப்பு உயரும். கடின உழைப்பு மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக் காணப்படும். உங்களின் வங்கியிருப்பு அதிகரிக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று மிகவும் உற்சாகமாக காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்களுக்கு சாதகமாக விளைவுகள் அமைய இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கை தேவை. இசை கேட்பது மற்றும் திரைப்படங்கள் பார்த்தல் போன்ற நிகழ்ச்சிகள் ஆறுதலைத் தரும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும். சில சமயம் நீங்கள் செய்த பணிகளை மீண்டும் செய்ய வேண்டி நேரும்.

உங்கள் துணையுடனான தொடர்பில் சில சிக்கல்கள் ஏற்படும். இதனை நீங்கள் தவிர்த்தல் வேண்டும். மனம் திறந்து பேசுவதன் மூலம் உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்கலாம்.

உங்கள் நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. பொருளாதார பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் பணத்தை சேமிக்க இயலாது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.03.2024




இன்று விரும்பும் பலன்கள் கிடைக் காது. உங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று சில சௌகரி யங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது சிறந்தது.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்படும். உங்கள் துணையை நீங்கள் தவறாகப் புரிந்து கொள்வீர்கள். உறவில் மகிழ்ச்சி நிலவ இத்தகைய சூழலை தவிர்க்க வேண்டும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகை யில் பணத்தை பயன் படுத்த இயலாது.




உங்கள் நண்பர்களிடமிருந்து உதவி பெறக்கூடிய சாதகமான சூழ்நிலை காணப்படுகின்றது. உங்களின் திட முயற்சி மூலம் பணிகளை செவ் வனே ஆற்றி இலக்குகளில் வெற்றி பெறு வீர்கள்.

இன்று நீங்கள் பணிகளை விரும்பி செய்வீர்கள். பணிகளை எளிதாகச் செய்வீர்கள். என்றாலும் வெற்றி பெற நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் சுமுகமான உறவு பாரமரிப் பீர்கள். உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு விசேஷம் பற்றி உங்கள் துணையுடன் கலந்தாலோசிப்பீர்கள்.

போதிய அளவு பணம் சம்பாதிப்பீர்கள். பொருளாதார பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் வங்கி யில் பணம் சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் இலக்குகளை அடைய கடின மாக உழைக்க வேண்டும். இன்றைய நாள் சுமூகமாக இருக்காது. தன்னம் பிக்கை குறைந்து காணப்படும். வெற்றி பெறுவதற்கு உங்கள் தன்னம்பிக் கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்களால் பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்களிடம் பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும். இதனால் உறவில் மகிழ்ச்சி பாதிக்கப்படும்.

வீட்டுப் பெரியவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும். எனவே பணத்தைச் சேமிப்பது கடினமாக இருக்கும்.

தேவையற்ற உணர்வுகள் காரணமாக ஆரோக்கி யம் குறையும்.




இன்று முன்னேற்றகரமான நாள். உங்களிடம் செயல்களை செய்து முடிக்கும் ஆற்றலும் உற்சாகமும் காணப்படும். இன்று அனைத்து விதத் திலும் செழிப்பான நாள்.

உங்கள் பணி சம்பந்தமான புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் திருப்தி உண்டாகும். நீங்கள் உங்கள் பணிகளை விரும்பிச் செய்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உறவை பராமரிப் பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். அதிர்ஷ் டம் இன்று உங்கள் பக்கம்.

நீங்கள் களிப்புடன் காணப்படுவீர்கள். இதனால் உங் களால் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்க இய லும்.








# விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்க்க முன்னுரிமை அளிப்போம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு





நாட்டை மீளக் கட்டியெழுப்புவதில் பல சவால்களைக் கடக்க வேண்டியுள்ள போதிலும், விவசாய சமூகத்தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை அளிகின்றோம். விரைவில் மிகப்பெரிய விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவின் அழைப்பையேற்று நேற்று தம்லகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவின் கலமெடியாவ கிராமத்தின் நெல் அறுவடையைக் கண்காணிக்கச் சென்றிருந்த வேளையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

தம்பலகமுவ பிரதேச செயலகப் பிரிவின் 9,000 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெரும்போகத்தின் போது கலமெட்டியாவ கிராம சேவகர் பிரிவில், மாத்திரம் 672 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வருகையுடன் கட்சி, நிற பேதமின்றி அங்கு கூடியிருந்த பிரதேச மக்கள் தாம் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை அவரிடம் கூறினர். அந்த பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்குமாறு உரிய அதிகாரிகளை ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இப்பிரதேச விவசாயிகள் தமது விளைச்சலுக்கு போதிய நீர் கிடைப்பதில்லை என்றும், அதனைப் பெறுவதற்கான கால்வாய் ஒன்று இல்லாமல் இருப்பதையும் விவசாய நிலங்களைப் பாதுகாக்க யானை வேலியை அமைத்துத் தருமாறும் ஜனாதிபதியிடம் கோரினர்.

அதற்காக வெண்டர்சன் குளம் தொடக்கம் புலியுத்துகுளம் வரையான ஒன்பது ஏரிகளுக்கும் நீர் அனுப்பக்கூடிய வகையில் கால்வாய் அமைத்து விவசாய நடவடிக்கைகளுக்கு போதிய நீரைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான சாத்தியக்கூறு ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் விவசாய செயற்பாடுகளை மையப்படுத்தி அதனை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன், தம்பலகமுவ பிரதேசச் செயலகப் பிரிவிற்குட்பட்ட 94 ஆவது பிரிவு முதல் பாலம் வரையான யானை வேலி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் வரையில் வீதி விளக்குகளை பொருத்துமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில் –


“இந்தியாவுடன் இணைந்து திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட வேலைத்திட்டம் எம்மிடம் உள்ளது. திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகத்திற்கு மேலதிகமாக, இந்தியாவில் இருந்து குழாய் மூலம் எரிபொருளை விநியோகிக்கும் திட்டமும் உள்ளது. சுற்றுலா மட்டுமின்றி, வேலைவாய்ப்புகளை விரிவுபடுத்திமுதலீட்டுவலயங்களைஉருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகத்தை கிழக்கின் பிரதான துறைமுகமாக அபிவிருத்தி செய்து அதன் ஊடாக தென்னிந்தியாவின் உற்பத்திகளை பரிமாறிக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. இந்த திட்டங்கள் திருகோணமலை மாவட்டத்தில் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் விவசாய தொழில், கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடி கைத்தொழில் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கிறோம். இப்பகுதியில் விவசாயத் தொழிலை எவ்வாறு மேம்படுத்துவது என்பது குறித்த யோசனையைப் பெறவே இன்று இங்கு வந்தோம். இது தொடர்பாக நீங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி அறிந்து கொண்டேன். இது தொடர்பான அறிக்கைகளை வழங்குமாறு ஆளுநருக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளேன். இந்த அபிவிருத்தித் திட்டப் பணிகள் 2025 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறோம்.

விவசாயத் துறையை மேம்படுத்த வேண்டும். போட்டித்தன்மை மிக்க விவசாயத் தொழில் துறையை உருவாக்க வேண்டும். சிறிய குளங்களை புனரமைத்து, அவற்றைப் பயன்படுத்த விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். மேலும், பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் விவசாய நிலையங்களை விவசாய நவீனமயமாக்கல் மத்தியஸ்தானங்களாக கட்டமைக்க வேண்டும்.

அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு விவசாய சேவை நிலையம் என்ற அடிப்படையில் 25 நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கான ஆதரவை அமெரிக்காவின் பில் மெலிண்டா கேட்ஸ் மன்றமும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை இந்தியாவும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.”– என்றார்.

# தமிழரசுக் கட்சியின் சிக்கலை சுமுகமாகத் தீர்ப்பதே நல்லது!



நக்கீரன்
(கனடா)

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு எதிராக கட்சி உறுப்பினர் ஒருவர் தொடுத்த வழக்கு கடந்த பெப்ரவரி 29 அன்று திருகோணமலை நீதி மன்றத்தின் முன் விசாரணைக்கு வந்த போது எதிர் வழக்காளர்கள், தலைவர் உட்பட ஏனைய பதவி களுக்கு தேர்தல் முறையாக நடக்க வில்லை, முறையான தேர்தலை மறுபடியும் நடத்தத் தாங்கள் அணிய மாக இருக்கிறார்கள் எனத் தெரி வித்தார்கள். மற்றைய எதிராளியான சுமந்திரனின் கருத்தறிய வழக்கு

மேலும் ஒரு சிக்கல் இருக்கிறது என நினைக்கிறேன். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாப்பு தொகுதி வாரியாகக் கிளைகள் அமைக்க வேண்டும் எனக் கூறுகிறது. ஆனால் இப்போது கோட்டங்களின் (பிரதேச) அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வர்களே பொதுக்குழுவில் இருக்கி றார்கள்.

எனவே ஜனவரி 21, 27 திகதி களில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தை ஏற்றுக் கொள்வதே புத்தி சாலித்தனமான காரியமாகும். இதில்

போல இந்த வழக்கினால் நன்மை உண்டாகியிருக்கிறது. இனிமேல் இலங்கைத் தமிழரசுக் கட்சி அதன் யாப்பின்படி வினை செய்ய வேண்டும்.





விசாரணை ஏப்ரில் 05 ஆம் திக திக்குத் தள்ளிப் போடப்பட்டுள்ளது.

வழக்காளர் தனது சமர்ப்பணத் தில் ஜனவரி 21 மற்றும் 27 இல் நடந்த பொதுக்குழு எடுத்த தீர்மா னங்களை எதிர்வழக்காரர்கள் முழுமையாக ஏற்றுக் கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தி னால் வழக்காளர் வழக்கைத் திரும் பிப் பெற அணியமாக இருப்பதாகக் கோடி காட்டியிருக்கிறார்.

அந்தத் தீர்மானங்களை நடை முறைப் படுத்த ஏன் சிறிதரன் தரப்பு பின்னடிக்கிறது என்பது தெரிய வில்லை.

8 மாவட்டங்களிலும் இன்னொரு தேர்தல் நடத்துவதாக இருந்தால் காலம் எடுக்கும். குறைந்தது 2-3 மாதங்கள் ஆகலாம்.

யாழ்ப்பாணம் (மூத்த துணைத் தலைவருடையது) மற்றும் மானிப் பாய் தொகுதி (முன்னாள் நா.உ. சரவணபவனுடையது) இரண்டிலும் பல ஆண்டுகளாகத் தேர்தல் நடை பெறவில்லை.

21, 27 திகதிகளில் வாக்களித்த வர்களில் சிலர் பொதுக்குழுவில் உறுப்புரிமை அற்றவர்கள். அவர்கள் எல்லாம் வாக்களித்துள்ளனர். உறுப் புரிமை புதுப்பிக்காதவர்களும் வாக்களித்துள்ளனர்.



யாரும் தற்பெருமை (egoism) பார்க்கத் தேவையில்லை. அதற்கு இடம் இல்லை.

யாப்பில் உள்ள குறைநிறைவு களை வரும் காலத்தில் திருத்தி அதனை செம்மைப்படுத்தலாம். செம்மைப்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்களே உள்ளன. பரப்புரைக்கு அதைவிடக் குறைவான காலமே இருக்கிறது.

எனவே வழக்காளரின் வேண்டு கோளை ஏற்று - அதாவது ஜனவரி 21, 27 திகதிகளில் நடந்த பொதுச் சபைத் தீர்மானங்களை நடை முறைப் படுத்தி, கட்சியை முன் நகர்த்துவதே எல்லோர்க்கும் நல்லது. இப்போது கட்சி நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளது.

தீமையிலும் நன்மை இருப்பது

யாப்பு விதிக்குமாறாக- திரு கோணமலை மாவட்டத்துக்கு பெருந் தலைவர் சம்பந்தன் ஐயாவின் வேண்டு கோளுக்கு இணங்க 6 பேர் பொதுச்சபைக்கு சேர்க்கப்பட்டார் கள். தலைவர் சேனாதிராசா 12 பேரை - அவரது மகன், சம்மந்தி, அகிலன் (கனடா) உட்பட 12 பேரை - பொதுச்சபைக்குள் நுழைத்துக் கொண்டார்.

எதிர்காலத்தில் இந்த விதிமீறல் கள் நடக்கா. நடந்தால் யாராவது நீதிமன்றத்தை அணுகுவார்கள்.

எதிர்வரும் ஏப்ரில் 05 ஆம் திகதி நீதிமன்றம் கூடும்போது எதிர்வழக்கா ளர் சுமந்திரன் தனக்காகத் தானே வாதிட இருக்கிறார்.

பெரும்பாலும் நேரம், பொருள் போன்றவற்றை மாதங்கணக்கில் விழுங்கும் கட்சிக் கிளைத் தேர் தல்களை தவிர்த்து ஜனவரி 21, 27 இல் பொதுக்குழுவில் நிறைவேறிய தீர்மானத்தை நடைமுறைப்படுத்து மாறு அவர் கேட்கக் கூடும்.

தனிமனிதர்களைவிட கட்சி யின் நலனே முக்கியமானது. தலை வர்கள், பொதுச் செயலாளர்கள் வந்து போகலாம். ஆனால் கட்சி அப்படியல்ல. அது ஓர் ஆலமரம்.




# 2023 நிதியாண்டில் யூனியன் வங்கியால் உறுதியான நிதிப் பெறுபேறுகள் பதிவு





2023 ஆம் ஆண்டு யூனியன் வங்கிக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வருடமாக அமைந்துள்ளது.

வங்கியின் பெரும்பாண்மை பங்குகளை CG Capital Partners Pte. Ltd. தனது துணை நிறுவனமான Culture Financial Holdings Ltd. ஊடாக கையகப்படுத்தியிருந்தது. CG Corp Global (CG) எனும் சர்வதேச நிறுவனத்தின் அங்கமாக CG Capital Partners Pte. Ltd. திகழ்கின்றது.

2023 நிதியாண்டில் நிலவிய மேம்படுத்தப்பட்ட பெரும்பொருளாதார சூழல், வியாபித்திருந்த நிதிசார் கட்டமைப்பில் சிறப்பாக இயங்குவதற்கு யூனியன் வங்கிக்கு வழியமைத்திருந்தது.

2023 நிதியாண்டில் வங்கி உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்ததுடன், நிகர வருமானத்தில் 18 வீத அதிகரிப்பை பதிவு செய்திருந்தது. ஆண்டின் நிகர வருமானம் 22,410 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

கடன்கள் மற்றும் திறைசேரி சொத்துக்களிலிருந்து கிடைத்த முன்னேற்றகரமான விளைவுகளின் பெறுபேறாக, வருமானத்தில் பிரதான பங்காக தேறிய வட்டி வருமானம் (NII), 8 வீதத்தால் அதிகரித்து 6,290 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

சொத்துக்கள் புத்தக மீள் விலையிடல் மற்றும் வட்டி செலவுகளை கவனமாக நிர்வகித்திருந்தமை போன்றவற்றினூடாக, தேறிய வட்டி எல்லைப் பெறுமதி 4.7 வீதமாக பதிவாகியிருந்தது. தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் 5 வீதத்தால் அதிகரித்து 1,200 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

இதில் வியாபார செயற்பாடுகள், கடன் அட்டைகள் மற்றும் பாங்கசூரன்ஸ் (Bancassurance) கட்டணங்கள் போன்றன பங்களிப்பு செய்திருந்தன. மதிப்பிறக்கத்துக்கு முன்னதான வங்கியின் தொழிற்பாட்டு வருமானம் 8,098 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. இது 4 வீத அதிகரிப்பாகும். இக்காலப்பகுதிக்கான மதிப்பிறக்க கட்டணம் 1,643 மில்லியன் ரூபாவாகும். கவனமான செலவு முகாமைத்துவ செயற்பாடுகளுக்கு மத்தியிலும், வங்கியின் மொத்த தொழிற்பாட்டு செலவீனங்கள் 20 வீதத்தால் அதிகரித்து 5,120 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. பண வீக்கத்தினால், கட்டணப்பட்டியல் விலைகள் அதிகரிப்பு மற்றும் பொது செலவுகள் அதிகரிப்பு போன்றன இதில் தாக்கம் செலுத்தியிருந்தன.

2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று, துணை நிறுவனங்களின் பங்குகள் அடங்கலாக, வங்கியின் வரிக்கு முன்னைய இலாபம் (PBT) 119 வீதத்தால் அதிகரித்து 780 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. வரிக்கு பிந்திய இலாபம் (PAT) 21 வீதத்தால் அதிகரித்து 379 மில்லியன் ரூபாவாக காணப்பட்டது. வருடத்தில் வரிகள் மற்றும் கட்டணங்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்திருந்தன.

குறிப்பாக நிதிச் சேவைகள் மீதான சமூக பாதுகாப்பு வரி (SSCL) மற்றும் பெறுமதி சேர் வரி (VAT) மற்றும் கூட்டாண்மை வரி வீதங்கள் போன்றன அதிகரித்திருந்தமை இதில் தாக்கம் செலுத்தியிருந்தன.

வங்கியின் மொத்த சொத்துக்களின் பெறுமதி 139,087 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7 வீத வளர்ச்சியாகும். மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வங்கி உறுதியான திரள்வு நிலையை பேணியிருந்ததுடன், திரள்வு சொத்து விகிதம் 37.93 வீதமாக காணப்பட்டதுடன், சகல நாணயங்களுக்குமான திரள்வு வலையமைப்பு விகிதம் 787.67 வீதமாக காணப்பட்டது. இது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்வானதாகும்.

வங்கியின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் 62,208 மில்லியன் ரூபாவாக காணப்பட்டதுடன், வாடிக்கையாளர் வைப்புகள் 87,985 மில்லியன் ரூபாவாக அமைந்திருந்தது. சகல வியாபார பிரிவுகளிலும் உறுதியான செயற்பாடுகளின் ஆதரவுடன், வங்கியின் CASA விகிதம் 27 வீதமாக பதிவாகியிருந்தது. வியாபார பிரிவுகளில் CASA நோக்குடனான செயற்பாடுகளினூடாக CASA பிரிவில் 8 வீதமாக அதிகரிப்பு பதிவாகியிருந்தது.

வங்கியின் நிலை 3 கடன்கள் விகிதம் என்பது 12.5 வீதமாக காணப்பட்டதுடன், சில பாரிய கடன்படுனர்கள் செயற்படா நிலைக்கு (நிலை 3) தள்ளப்பட்டதன் காரணமாக மேற்படி விகிதம் அதிகரித்தது. வங்கி உறுதியான மூலதன போதுமை நிலையை பேணியிருந்ததுடன், ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை விட உயர்வாக கொண்டிருந்தது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதியன்று வங்கியின் மொத்த மூலதன விகிதம் 18.2 வீதமாக காணப்பட்டது.

யூனியன் வங்கி குழுமத்தில் UB Finance PLC மற்றும் National Asset Management Ltd.ஆகியன அடங்கியுள்ளன. இவையும் முன்னேற்றகரமான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தன.






# பெண் தொழில்முயற்சியாளர்களை மக்கள் வங்கி வலுவூட்டுகிறது

சர்வதேச மகளிர் தினத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் வங்கித் துறையில் முன்னணி நிறுவனமான மக்கள் வங்கி, நல்விளைவு மிக்க முயற்சிகள் மூலம் பெண்களுக்கு வலுவூட்டலுக்கான தனது அர்ப்பணிப்பைப் பெருமையுடன் அறிவித்துள்ளது.

Good Market உடனான மூலோபாய ஒத்துழைப்புடன், மக்கள் வங்கி அண்மையில் கொழும்பு 05 இல் உள்ள மக்கள் வங்கி பணியாளர்கள் பயிற்சிக் கல்லூரியில் பெண் தொழில் முயற்சியாளருக்கான விசேட பயிற்சி நிகழ்வை நடத்தியது.

இந்த முயற்சியின் கீழ், மேல் மாகாணத்தைச் சேர்ந்த 30 பங்கேற்பாளர்கள் கொண்ட குழுவில் இருந்து 12 தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். Good Market நிறுவனத்தின் இணை ஸ்தாபகர் அச்சலா சமரதிவாகரவினால் பயிற்சி நடத்தப்பட்டது.

Good Market இன் தரத் தேவைகளுடன் அந்தந்த தொழில் முயற்சிகளை சீரமைப்பதில் கவனம் செலுத்தி, அந்த வணிகங்களுக்கு உறுதியான அத்திவாரத்தை உறுதி செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

சமூக தொழில்முயற்சியாண்மை, நெறிமுறை வழுவாத நடைமுறைகள் மற்றும் நிலைபேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றில் சமூகத்தை ஆதரிக்கும் Good Market , இலங்கை தொழில்முயற்சியாளர்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து செயல்பட்டுவருகிறது. அவர்களின் விரிவான வணிக தொடக்க முயற்சிகளுக்கு இடமளிக்கும் திட்டம் வணிகங்களை நிலைபேண்தகு முயற்சிகள் மற்றும் பயனுள்ள வர்த்தகநாம பிரபலப்படுத்தல் மூலோபாயங்களுக்கான கருவிகளுடன் பலப்படுத்துகிறது.

இந்த ஆண்டு மக்கள் வங்கியின் வனிதா வாசனா நிகழ்ச்சித் திட்டம், பெண் தொழில்முயற்சியாளர் கோட்பாடுகளுடன் இணைந்து, பெண்களுக்கு வலுவூட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

துணைபோகும் சூழலை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வலியுறுத்தும் வகையில், சிரேஷ்ட நிர்வாக முகாமைத்துவத்தில் பெண்களின் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தை மக்கள் வங்கி எடுத்துக்காட்டுகிறது. வர்த்தக உலகில் பெண்களுக்கு எதிராகவுள்ள எந்தவொரு இரும்புத்திரையையும் தகர்ப்பதற்கான உறுதியான முயற்சியை இது காண்பிக்கிறது.

தலைமைத்துவத்தில் பாலின சமத்துவத்திற்கு அப்பால், மக்கள் வங்கியிலுள்ள பெண் பணியாளர்கள் மற்றும் அது சேவையை வழங்கும்ம் சமூகங்களின் நலனை உறுதி செய்தவாறு, தொழில் மேம்பாடு, பெண்களின் ஆரோக்கியம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுடன் பெண்களின் நலன் மீதான அதன் அர்ப்பணிப்பை மக்கள் வங்கி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.






## எதிர்காலம் உங்களுக்காகக் காத்திருக்கிறது:

# பிரதான உள்ளீர்ப்புக்கான விண்ணங்களை கோரும் SLIIT





கல்வியில் சிறந்து விளங்கும் பாரம்பரியம் மற்றும் தொழில்துறைக்குத் தயாரான பட்டதாரிகளை உருவாக்குவதில் நற்பெயரைப் பெற்றுள்ள உயர் கல்வியின் முன்னணியாளரான SLIIT நிறுவனம், பரந்துபட்ட உயர்கல்வி வாய்ப்புகள் மற்றும் வெற்றியான எதிர்காலத்துக்கான வழிகாட்டல்களை வழங்கும் நோக்கில் 2024 ஆம் ஆண்டின் புதிய உள்ளீர்ப்புக்கான விண்ணப்பங்களை ஆரம்பித்துள்ளது.

1999 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட SLIIT, கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகத் திகழ்வதுடன், மூன்றாம் தரக் கல்வியை வழங்கும் தனியார் நிறுவனத்துக்கான அடையாளமாக விளங்குகிறது.

இருபத்தைந்து வருடத்துக்கும் அதிகமான காலத்தைக் கொண்டாடிவரும் SLIIT நிறுவனம், பொதுநலவாய பல்கலைக்கழக சம்மேளனத்தின் உறுப்பினராகவும், சர்வதேச பல்கலைக்கழக சம்மேளனத்தின் உறுப்பினராகவும் காணப்படுவதுடன், ஐக்கிய இராச்சியத்தின் பொறியியல மற்றும் தொழில்நுட்ப நிறுனத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற இலங்கையின் முதலாவது நிறுவனமாகவும் விளங்குகிறது.

2023 QS பல்லைக்கழகத்தரப்படுத்தலில் ஆசியாவில் உள்ள சிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் 750 வது இடத்தைப் பிடித்திருக்கும் SLIIT, இந்தத் தரப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒரு சில இலங்கைப் பல்கலைக்கழக்களில் ஒன்றாகவும் காணப்படுகிறது.

இந்த நிறுவனம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்துறையின் அனைத்து மட்டங்களிலும் அதிகமான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பட்டதாரிகளை உருவாக்கியிருப்பதுடன், 25 ஆயிரம் மாணவர்கள் மற்றும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான பழைய மாணவர்கள் என 96 வீத மானவர்கள் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.















கணினி, வணிகம், பொறியியல், மனிதநேயகம் மற்றும் விஞ்ஞானம், கட்டடக்கலை உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் இணங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள SLIIT இன் விசேட பட்டங்களுக்கான பாடநெறிள், நவீன தொழில்துறைகளினால் மதிப்பிடப்படும் நிபுணத்தவத்தை உருவாக்க வடிவமைக்கப்பட்ட இணையற்ற பன்முகத்தன்மையை வழங்குகிறது.

SLIIT இன் கணினிப் பாடத்திட்டமானது கணினி விஞ்ஞானம், கணினி கட்டமைப்புப் பொறியியல், தகவல் தொழில்நுட்பம், மென்பொருள் பொறியியல், கணினிக் கட்டமைப்பு மற்றும் வலையமைப்புப் பொறியியல், தகவல் கட்டமைப்புப் பொறியியல், ஊடாட்டம் நிறைந்த ஊடகம், சைபர்செக்கியூரிட்டி மற்றும் தகவல் விஞ்ஞானம் போன்ற பரந்துபட்ட பாடநெறிகளைக் கொண்டுள்ளது. இந்தப்பட்டப்பாடத்திட்டங்கள் யாவும் தொழில்துறையின் கேள்விக்கு ஏற்றவகையில் வடிவமைக்கப்பட்டிருப்பதுடன், புதிய தொழில்நுட்பம் மற்றும் மென்பொருள் முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

SLIIT இன் வணிகப் பிரிவானது வணிக முகாமைத்துவம், மனிதவள மூலதன முகாமைத்துவம், சந்தைப் படுத்தல் முகாமைத்துவம், கணக்கீடு மற்றும் நிதி, சரக்குப்போக்குவரத்து மற்றும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவம், வணிக ஆய்வு, தகவல் கட்டமைப்பு முகாமைத்துவம் மற்றும் தர முகாமைத்துவம் உள்ளிட்ட வணிக முகாமைத்துவத்துடன் இணங்கக் கூடிய விடயங்களுக்கு சிறந்த அடித்தளத்தை வழங்குகின்றது. இந்த பட்டங்கள் நடைமுறை திறன்கள் மற்றும் தொழில்துறை பொருத்தத்தை வலியுறுத்துவதுடன், வணிக உலகில் பல்வேறு பாத்திரங்களுக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துகின்றன.







# ஸ்மார்ட்போன் தொழில்நுட்பத்தில் சிங்கர் ஸ்ரீலங்காவின் HONOR X9B




சிங்கர் ஸ்ரீலங்கா பி.எல்.சி, புத்தாக்கம் மற்றும் நுகர்வோர் இலத்திரனியல் வீட்டு உபயோகப் பொருள்கள் துறையில் முன்னணியில் இருப்பதோடு, சமீபத்தில் HONOR இன் புதிய ஸ்மார்ட்போன் மாதிரிகளை பிரம்மாண்டமாக வெளியிட்டு குறிப்பிடத்தக்கதோர் தடம் பதித்தது.

கடந்த பெப்ரவரி 22 இல் கொழும்பில் உள்ள ஷங்ரி-லா ஹோட்டலில், HONOR X தொடரின் தொழில்நுட்ப வல்லமை மற்றும் புதுமையான வடிவமைப்பை வெளிப்படுத்தியதோடு, இது SINGER மற்றும் HONOR இடையேயான செழிப்பான




கூட்டுறவினை சிறப்புடன் வெளிகாட்டுகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் HONOR அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, இலங்கை ஸ்மார்ட்போன் உரிமையாளர்கள் மத்தியில் HONOR பெற்ற விரைவான வெற்றியையும் இந்நிகழ்வில் கொண்டாடியது சிறப்பம்சமாகும்.

“HONOR உடனான எமது கூட்டுறவானது அனைவரும் அணுகக்கூடிய, தொழில்நுட்பத்தில் சிறந்து வழங்குனராக அர்ப்பணிப்புடன் இருப்பதற்கானதோர் பயணமாகும். X7b மற்றும் X8b உடன் HONOR X9b” இன் அறிமுகம், புதுமை மற்றும் தரத்திற்கான எங்கள் ஆர்வத்தினை பிரதிபலிக்கிறது.

இலங்கையின் நுகர்வோர் ஒப்பிடமுடியாத தரம் மற்றும் மதிப்பை அனுபவிக்கும் வகையில் இந்த மாதிரிகள் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன” என்று SINGER குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் விஜேவர்தன, இப்புதிய சாதனங்களின் அறிமுகம் குறித்து கருத்து தெரிவித்தார்.

இந்த ஆண்டின் HONOR இன் அறிமுக நிகழ்வு HONOR X9b ஐ மையமாகக் கொண்டதோடு, இது மிகச்சிறந்த ULTRABOUNCE ANTI DROP DISPLAY தொழில்நுட்பத்தை கொண்டுள்ளது. இந்த அம்சம், வாடிக்கையாளர்களுக்கு அளித்த வாக்குறுதியின் அடையாளமாக, நீடித்துழைப்புடன் புதுமையின் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

இந்த நிகழ்வில் HONOR X7b காட்சிப்படுத்தப்பட்டதோடு, அதன் நீண்ட கால பேட்டரி ஆயுள் மற்றும் அழகுடன் கூடிய HONOR X8b, சந்தையில் உள்ள அனைத்து பயனாளர்களினதும் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய HONOR வழங்கும் பல்வேறு சாதனங்களின் வரிசையை மேலும் விரிவுபடுத்துகிறது.

இந்தப் புதிய சாதனங்கள் இலங்கையின் நுகர்வோர் தளத்தில் சிறந்த வரவேற்பை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது உயர்தர, சிறந்த விலையில் தயாரிப்புகளை வழங்குவதற்கான SINGER அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது. மேலும் இலங்கையில் HONOR சாதனங்களின் ஒரே விநியோகஸ்தராக உள்ள SINGER, இந்த மாதிரிகளிடேயே சிறந்ததோர் வரவேற்பை பெற்று மேலும் தனது சேவைகளை மேம்படுத்தும் என்று நம்பப்படுகின்றது.